

# University of Jaffna

# Prof. S. Vithiananthan Memorial Lecture - 2022

**(First Vice-Chancellor of the University of Jaffna)**

## “நாவில்லா உபதேசிகள்:
## காலனிய யாழ்ப்பாணத்தில்
## சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்”

**by**

**Dr. Sellathurai Sutharsan**
Senior Lecturer,
Department of Tamil,
Faculty of Arts,
University of Peradeniya.

**on**

**Thursday 17th November 2022**
**at 3.00 p.m**

**at**

**Kailasapathy Auditorium,**
**University of Jaffna.**

# Prof. S. Vithiananthan Memorial Lecture - 2022

(First Vice-Chancellor of the University of Jaffna)

**"நாவில்லா உபதேசிகள்:
காலனிய யாழ்ப்பாணத்தில்
சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்"**

by

**Dr. Sellathurai Sutharsan**
Senior Lecturer,
Department of Tamil,
Faculty of Arts,
University of Peradeniya.

on

**Thursday 17 th November, 2022**
**at 3.00 p.m**

**at**
**Kailasapathy Auditorium,**
**University of Jaffna.**

# துணைவேந்தரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 இல் பல்கலைக்கழக வளாகமாக ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் 1979 இல் பல்கலைக்கழக மாகத் தரமுயர்த்தப்பட்டது. அவ்வேளையில் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர் தமிழ்ப் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன். பத்து வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தலைமைதாங்கி வழிநடத்தி மண்ணகவாழ்வை முடித்துக்கொண்ட பெருந்தகை யாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். அவரது நினைவாக ஆண்டுதோறும் நிகழ்த்தப்படுகின்ற பேருரைக்கு, தலைமை தாங்குவதற்கு எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பெருமைக் குரியதாகக் கருதுகின்றேன். மறைந்த பேராசிரியருக்கு எனது வணக்கத் தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வித்தியானந்தன்1924 இல் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையிலுள்ள வீமன்காமம் என்னும் கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை வீமன்காமத்திலும், இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், உயர்நிலைக் கல்வியை யாழ் பரியோவான் கல்லூரியிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்று, 1941 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார். அங்கு தமிழ்த்துறையின் முதல் பேராசிரிய ரான சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் தமிழ் கற்று, முதல் வகுப்புச் சித்தியுடன் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

1946 இல் மேற்படி பேராசிரியர்களின் வழிநடத்தலில் முதுகலை மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். அதே ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் J.R.Marr இன் வழி

காட்டுதலில் பத்துப்பாட்டு நூல்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இதன் பின்னர் 1970 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். இவரது மாணவப் பரம்பரையினரே இன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தமிழ்ப் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர்.

பேராசிரியர் வித்தியானந்தன் உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தலைவராகவும், இலங்கை கலைக்கழக நாடகப்பிரிவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். தமிழாராய்ச்சி மன்ற இலங்கையின் கிளையின் தலைவராகப் பணியாற்றிய காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினையும், பின்னர் கிழக்கிலங்கையிலும், வன்னியிலும் பிராந்திய மாநாடுகளையும் நடாத்தி தமிழ்மொழிக்கும் ஈழத்திற்கும் பெருமை தேடித்தந்தவர். இலங்கை கலைக்கழகத்தின் தலைமைப்பொறுப்பை வகித்த காலத்தில் நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றியும் அச்சிற் பதிப்பித்தும் தமிழர் பண்பாட்டினைக் காப்பாற்றியவர்.

1974 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவரான பேராசிரியர். க. கைலாசபதியைத் தொடர்ந்து 1977 இல் தலைமைப் பொறுப்பை ஏற்ற பேராசிரியர் வித்தியானந்தன் 1979 இல் யாழ்ப்பாண வளாகம் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டபோது அதன் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். பத்து வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தலைமைதாங்கி வழிநடத்திய பெருமைக்குரியவர் பேராசிரியர் வித்தியானந்தன். இவரது காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்வேறு வழிகளிலும் வளர்ச்சி பெற்றிருந்தது. மருத்துவபீடம் இவரது

காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. விவசாயபீடம், பொறியியல்பீடம் ஆகியவற்றிற்கான ஆரம்ப முயற்சிகளும் இவரது காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் பேராசிரியர் வித்தியானந்தன் நூலகம் என்ற பெயருடனேயே காட்சிதருகின்றது. இது அவர் பல்கலைக்கழகத்திற்காகச் செய்த சேவைகளின் சாட்சியாக உள்ளது. தமிழ்த்துறை மாணவர்களுக்கு பேராசிரியர் வித்தியானந்தனின் பெயரிலான அறக்கொடையின் மூலம் ஆண்டு தோறும் பட்டமளிப்பு விழாவில் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே ஆண்டுதோறும் அவரை நினைவு கூருமுகமாக இவ்வாறானதொரு நினைவுப்பேருரையும் நிகழ்த்தப் பட்டு வருகின்றது.

இந்தவகையில் இந்த ஆண்டின் நினைவுப் பேருரையினை நிகழ்த்தவுள்ளவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. செல்லத்துரை சுதர்சன் அவர்கள். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆரம்பக்கல்வியை வசாவிளான் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார். அங்கு தமிழ் சிறப்புக்கலை பயின்று முதலாம் வகுப்பில் சித்திபெற்றதோடு முதுதத்துவமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக நியமனம் பெற்ற பின்னர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 'பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்ப் புலமை மரபில் காலனிய எதிர்ப்பு' என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரியும் செல்லத்துரை சுதர்சன் பல ஆய்வு நூல்களையும், ஆய்வுக்

கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். தமிழ் ஆய்வு தொடர்பான பல்வேறு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டவராக இருந்து இவர் தமிழ்ப்பணி புரிந்து வருகின்றார். பேராசிரியர் வித்தியானந்தன் கருக்கொண்ட பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 'வாழையடி வாழையாக' வந்து, இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவரது நினைவுநாளில் 'நாவில்லா உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறு புத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்' என்னும் தலைப்பில் பேருரையினை வழங்கவுள்ளமை சிறப்பானதாகும். துணைவேந்தர் என்ற முறையில் அவரை வாழ்த்தி வரவேற்பதுடன் எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நாவில்லா உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்

- கலாநிதி செல்லத்துரை சுதர்சன் -

(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் அவர்களே! மதிப்புயர் பதிவாளர் அவர்களே! கலைப்பீடாதிபதி அவர்களே! தமிழ்த்துறைத் தலைவர் அவர்களே! பேராசிரியர்களே! சிரேஷ்ட விரிவுரையாளர்களே! விரிவுரையாளர்களே! பதவிநிலை அலுவலர்களே! மாணவச் சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் (1924-1989) அவர்களின் நினைவாக, இந்த உரையை நிகழ்த்துமாறு அழைத்த, தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள், ஈழத்துத் தமிழியலுக்குப் பணியாற்றிய புலமையாளர்களில் ஒருவர். ஆரம்பத்தில் திராவிட இயக்கக் கருத்தியல் சார்பும், பின்னர் தமிழின உணர்வின் வழியான கருத்தியல் சார்பும் கொண்ட இவர், தமிழ்மொழி பேசும் சமூகங்களின் ஒருமைப்பாட்டை, கலை இலக்கியத் தளத்திலே நின்று வலியுறுத்தியவர். தமிழியல் ஆய்வுப் பரப்பை, இன மற்றும் சமயப் பன்மைத்துவத் தளத்தில் அகலப்படுத்தியவர். செந்நெறி இலக்கியங்களே உயர்வானவை எனக் கருதிவந்த தமிழ்ச் சூழலில், நாட்டுப்புறக் கலை, இலக்கியங்களும் உயர்வானவைதாம் எனும் மனப்பாங்கை ஏற்படுத்தி, அவை தொடர்பான ஆய்வு மற்றும் ஆற்றுகைச் செயற்பாடுகளை நிறுவனவழி முன்னெடுத்தவர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பேராதனை மாணவரும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மேனாள் தலைவரும், தமிழ்ப் பேராசிரியரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தருமான அவர், 'கிறிஸ்தவமும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும்', 'அமெரிக்க மிஷனும் தமிழர் கல்வியும்', 'ஈழத்து மிஷனரிமார் தமிழ்த் தொண்டு', 'ஈழத்தில் கிறிஸ்தவர் தமிழ்ப் பணி' போன்ற தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள், காலனிய யாழ்ப்பாணத்தில் தமிழின்நிலை குறித்த முன்னோடியான ஆய்வு முயற்சிகள். இம்முயற்சிகளின் காரணமாக, அவரின் நினைவாக நிகழ்த்தப்பெறும் இந்த உரையை, 'நாவில்லா உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்' என்ற தலைப்பில் நிகழ்த்துவது பொருத்தமானது என எண்ணுகிறேன்.

## அறிமுகம்

பருத்தித்துறைச் சந்தையில் இருந்த புளியமரம் ஒன்றின் கதை சுவாரசியமானது. வரலாற்று நூல்களில் பதிவான அந்தப் புளியமரத்தின் கதையைக் கூறுவதோடு, இந்த உரையை ஆரம்பிப்பது பொருத்தம் என எண்ணுகிறேன். 1548 இல் சவேரியார் என்னும் பெயருடைய கத்தோலிக்க மதகுரு யாழ்ப்பாணம் வந்து, சங்கிலி அரசனைச் சந்தித்த பின்னர், பருத்தித்துறை வழியாகத் திரும்பிச் சென்றபொழுது, இந்தப் புளியமர நிழலில் நின்று சமயப் பிரசங்கம் செய்தார் என்ற செவிவழிக் கதையோடு இதன் புகழ் பரவ ஆரம்பிக்கிறது. ஒல்லாந்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த பால்டியஸ் (Baldaeus) என்ற புரட்டஸ்தாந்து மதகுரு, 1658 இல் நான்கு புறமும் சடைவிரித்துப் பரந்த, கடலோரக் காற்று இதமாகத் தழுவிய, இந்தப் புளியமர நிழலில் நின்று வேதாகம சுவிஷேசத்தைப் பிரசங்கம் செய்து மக்களைச் சுவீகரித்தார். இந்த வரலாற்றுச் செய்தி புளியமரத்தின் புகழை மேலும் ஓங்கச் செய்தது. எவ்வாறெனில், இது பால்டியஸ் செய்த முதல் பிரசங்கம் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து சமயத்தின் முதல் பிரங்கமாகவும், இந்தப் புளியமர நிழலில் நிகழ்த்திய முதலாவது

பிரசங்கமாகவும் வரலாற்று எழுத்துகளில் பதிவுபெற்றுள்ளது. இதன் பின்னர், தென்னிந்தியாவின் தரங்கம் பாடி மிஷனைச் சேர்ந்தவரும் புகழ்பெற்ற மிஷனரியுமாகிய பிரடெரிக் வார்ச் என்பார், *1760* இல் இந்தப் புளியமர நிழலில் நின்று, கிறிஸ்தவப் பிரசாரம் செய்து சென்றார் என்பதும் எழுத்துமூல வரலாறு. (வேலுப்பிள்ளை, சி.டி. *1984:25-26*). முன்னர் குறிப்பிட்ட பால்டியஸ் என்பார், தெல்லிப்பளையிலிருந்து பலகாலம் கிறிஸ்தவத்தைப் பரப்பியும், 'கொறமண்டலும் இலங்கையும்' எனும் வரலாற்று நூலை எழுதியுமிருந்த காலத்தில்தான், புளியமர நிழலிலே, கடலோரக் காற்றில் கலந்த அவரது பிரசங்கம், அவ்வாறு கலவாதிருக்க, அச்செழுத்துக்களை வேண்டியிருந்தது! முதன் முதலில் தமிழ் அட்சரங்களை ஐரோப்பாவில் அச்சிடுவதற்குக் காரண கர்த்தாவான பால்டியஸ் என்பவரால், அவர் முதலில் நின்று பிரசங்கித்த புளியமரம், 'பால்டியஸ் புளியமரம்' (வேலுப்பிள்ளை, சி.டி. *1984:25-26*) என்ற பெருமையையும் சூடிக்கொண்டது.

இந்தக் கதையும் நூல்களின்வழி கிடைக்கப்பெறுகின்ற இதுபோன்ற பிறகதைகளும், அச்சுக்கு முந்திய காலனிய யாழ்ப்பாணத்தில், சமயப் பிரசாரமானது, வழிபாட்டிடங்களிலும் மர நிழல்களிலும் கொட்டகைகளிலும் நிகழ்த்தப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கின்றன. வழிபாட்டிட முன்றில்களும் மக்கள் அதிகம் கூடும் சந்தை போன்ற பொது இடங்களும் பாரிய மரநிழற் குடைகளும் சமயப் பிரசாரக்களங்களாக ஆரம்பப் பிரசாரகர்களுக்கு அமைந்தன. அவற்றினால், அவர்கள் எதிர்கொண்ட சிரமங்களே அச்சு ஊடக எண்ணத்தை அவர்களிடம் உருவாக்கியது என முன்னர் கூறிய புளியமரத்தின் கதையின்வழி வாசிக்க முடிகிறது. பால்டியஸ் எனும் சமயப் பிரசங்கி, முதன்முதலில் தமிழ் எழுத்துக்களை ஐரோப்பாவில் உருவாக்கி அச்சிட்ட நிகழ்வு, பிரசங்கத் தேவையின் வழியாக அச்செழுத்துப் பிரதிகளின் பிறப்பைப் புலப்படுத்துவதோடு யாழ்ப்பாணத்தில் அச்சுவாகன வருகையின் தேவையையும் அறிவித்து நிற்கிறது. மேரி மற்றும் மார்க்கிரட் லெஜ்ச் (Mary and Margaret W.Leitch) "சைவர்களுக்குச்

சமய உபதேசம் என்பது முற்றிலும் புதிய விஷயமாகும். சைவக்குருமார்கள் ஒருபோதும் சமய உபதேசம் செய்ததில்லை" *(1890:36)* எனவும், நரசிங்கபுர வீரசாமி முதலியார், "யாழ்ப்பாணம் ஒரு சிறுநூலையேனும் ஒரு சிற்றுரையையேனுஞ் செய்குநரில்லாத தேசம்" (ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு. *1996:143*) எனவும் கூறியநிலையில் அச்சின் வருகை, மாற்றத்தை ஏற்படுத்தியது. நாவுள்ள உபதேசிகள் நிகழ்த்திய பிரசாரம், நாவில்லாத உபதேசிகளான சிறுபுத்தகங்களாக முளைகொண்டு பரவிய வரலாறும் இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது.

காலனிய யாழ்ப்பாணம் என்னும் நீண்ட வரலாற்றுப் பரப்பில், சமயஞ்சார் சிறுபுத்தகங்களை முன்னிறுத்தி அவற்றின்வழியாக, கிறிஸ்தவ மற்றும் சைவக் கருத்தாடலின் போக்கைக் கட்டமைக்க முயல்வதே, இந்த உரையின் பிரதான நோக்கம். அந்தவகையில், காலனிய யாழ்ப்பாணச் சூழமைவின் முக்கியமான அடிப்படைகள் எவை, சமயக் கருத்தியற் போர்வெளியில், சமயப் பிரசாரம் குறித்த சொற்களின் பயில்நிலை எவ்வாறமைந்து, அச்சின் வருகை மற்றும் அதன்வழி உருவான எழுத்துப் பண்பாட்டின் உருவாக்கம் எவ்விதத்தில் நிகழ்ந்தது, சிறுபுத்தகங்களின் தோற்றம் மற்றும் பெருக்கம் எவ்வாறிருந்தது, சமயக் காலனியம் எவ்வாறு தோன்றி வளர்ச்சிபெற்றது, கிறிஸ்தவ மற்றும் சைவர்களின் சிறுபுத்தகங்களின் வழி சமயம்சார் கருத்தாடல் எவ்வாறு நிகழ்த்தப்பெற்றது போன்ற புலமைசார் வினாக்களை இந்த உரை அவாவி நிற்கிறது. இவையனைத்திற்கும் பின்புலமாக அமைந்த, காலனிய யாழ்ப்பாணச் சூழமைவின் முக்கியமான அடிப்படைகள் குறித்து முதலில் நோக்கலாம்.

## காலனிய யாழ்ப்பாணம்

ஐரோப்பியமைய முதலாளித்துவம் தனது பொருளாதார நலன் கருதி ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மேற்கொண்ட பொருளாதார, கலாசார ரீதியிலான ஆதிக்கத்தைக் 'காலனியம்' (Colonialism) எனும் பதம் குறிக்கிறது. (Nayar, Pramod k. 2013:5)

காலனிய ஆதிக்கத்திற்கு எதிராக, விடுதலையை அவாவிநிற்கும் கருத்துநிலை, 'காலனிய எதிர்ப்பு' (Anti-Colonial Resistance) ஆகும். ஐரோப்பியப் பேரரசுவாதத்தின் ஆட்சிநிலைக் கருத்தியலான தேசியவாதம் (Nationalism) காலனிய நாடுகளில் ஆதிக்கத் தேசியவாதமாக அமைந்தது. (Nayar, Pramod k.2013:9) இதற்கு மாறாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் எதிர்நிலைத் தேசியவாதம் எனும் பண்பாட்டுத் தேசியவாதம் (Cultural Nationalism) எழுச்சிபெற்றது. இத்தகைய எதிர்நிலைத் தேசியவாதக் கருத்தியல் (Ideology of Oppositional Nationalism) சமய அடையாள அரசியல் இயக்கங்களை (Religious Political movements) உருவாக்கிற்று. (Nayar, Pramod k. 2013:14) இவ்வியக்கங்கள் காலனிய நீக்கத்திற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் வினையாற்றின. இந்தவினை யாற்றல் பெரும்பாலும் மதம், மொழிசார் புலமைத்துவத்தைத் தளமாகக் கொண்டமைந்தது. இதன்விளைவாக, மரபார்ந்த சுதேசச் சமூகங்கள் நவீன சமூகங்களாக மாற்றமுற்றன. இச் சமூகங்களில் உருவாகிய புலமைமரபுகள், காலனிய எதிர்ப்பு அரசியல் நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தன.

இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்த இலங்கைத்தீவின் கேந்திர, வர்த்தகநிலை முக்கியத்துவம் காரணமாக, ஆங்கிலேயக் காலனியத்தின் *(1796-1948)* முக்கியமான நாடாக இலங்கை விளங்கியது. **1796** ஆம் ஆண்டு, ஆங்கிலேயக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியது. ***1802***ஆம் ஆண்டு, முடிக்குரிய ஆங்கிலேயக் காலனிய ஆட்சியின்கீழ், 'காலனிய இலங்கை' (Colonial Ceylon) என்ற ஒருமைப்பாடு ஏற்படுத்தப்பட்டது. எனினும், இந்தியாவின், மதராஸ் மாகாணத்தின் (Madras Presidency) ஓர் அலகாக, யாழ்ப்பாணம் ஆங்கிலேயரால் இணைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மூன்று பக்கம் நீராற் சூழப்பட்டதும், இலங்கைத் தீவின் வடமுனையில் உள்ளதுமான நிலப்பகுதி. இதன் காரணமாக 'யாழ்ப்பாணத் தீபகற்பம்' (The Jaffna Peninsula) எனப் பெயர்பெற்றது. இத்தகைய புவியியல் அமைவு காரணமாக, பிரத்தியேகமான சிறப்பியல்புகளை வரலாற்று ரீதியாகப் அது பெற்றிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலவரங்களும் யாழ்ப்பாணத்தை இலங்கையின் இரண்டாவது தலைநகரமாகக் கட்டமைத்தன.

காலனிய யாழ்ப்பாணத்தின் தமிழ்ச் சமூக பண்பாட்டு இயங்குநிலைகளை அறிந்துகொள்வது, அக்காலப் புலமைமரபின் முக்கிய அம்சங்களைக் கண்டறிவதற்கு வாய்ப்பாய் அமையும். பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை ஆராய்ந்த பலரும், இக்காலத்தை நிலைமாறு காலகட்டமாக இனங்கண்டுள்ளனர். இக்கால யாழ்ப்பாணத்தில், (அ) கிறிஸ்தவ மிஷனரிகளால் வழங்கப்பட்ட கல்வியும் அக் கல்விகற்ற சுதேசிகளும் யாழ்ப்பாணப் பூர்விக மக்களுக்குக்கிடைத்த தொழில் வாய்ப்பும் சமூக அந்தஸ்தும் (இ) யாழ்ப்பாணப் பூர்விக மக்களின் குடியகல்வும் குடியசைவும் (ஈ) பூர்விக மக்களின் அரசியல் தொடர்பான விழிப்புணர்வும் செயற்பாடுகளும் (உ) அச்சுப் பண்பாடும் அதன்வழித் தோன்றிய பத்திரிகைகள், பதிப்பு நூல்கள், பாடநூல்கள், அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள் முதலிய அறிவுப் பரம்பற் செயற்பாடுகளும் கிறிஸ்தவக் காலனியத்தினதும் அதன்மீதான எதிர்ப்பினதும் முக்கிய அடிப்படைகளாய் அமைந்தவை.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசரும் (கத்தோலிக்கம்) ஒல்லாந்தரும் (புரட்டஸ்தாந்து) மேற்கொண்ட சமயக் காலனியத்தால் (Religious Colonialism) யாழ்ப்பாணத்துச் சைவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டுச் சாம்பலாயின. ஆங்கிலேயரின் புரட்டஸ்தாந்துக் காலனிய மானது, 'சைவம்சார் உலகநோக்கு' (Saiva Mindset) என்பதைச் சைவர்களிடமும்,

'கிறிஸ்தவம்சார் உலகநோக்கு' (Chirstian Mindset) என்பதை கிறிஸ்தவர்களிடமும் வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகம் வலியுறுத்துவதாய் அமைந்தது.

இலங்கையில் முதன்முதலாக 1837 இல், அச்சு இயந்திரம் அறிமுகமாகியது. மதப் பிரசாரம், கல்வித்தேவை ஆகியவற்றின் நிமித்தம் யாழ்ப்பாணத்திற்கு அச்சியந்திரம் கொண்டுவரப்பட்டது. மதப்போர் அரசியலில், 'நாவில்லா உபதேசி' எனும் நிலையில் தோன்றிய பெருமளவு 'சிறு புத்தகங்கள்', யாழ்ப்பாணத்தை, சமயப் போராட்டக்களரியாக மாற்றின. சமயப் பொருள்கோடல்கள் (Religious Discourses) எதிரும் புதிருமாக நிகழ்ந்த இக்காலத்தில் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் ஆகியவற்றை முதன்மைப்படுத்திய புத்தக உற்பத்தியும், நுகர்வும் அதிகமாயின.

ஆறுமுகநாவலர் தலைமையிலான, 'சைவமே மெய்ச்சமயம்' எனும் கொள்கையினை வரித்த 'சைவ மறுமலர்ச்சி இயக்கம்' (Saiva Renaissance Movement) மிஷனரி ஊழியத்துக்கு எதிரான சைவ ஊழியமாகியது. இதன்வழி, ஈழத்தில் 'புரட்டஸ்தாந்துச் சைவம்' (Protestant Saivam) என்று கருதத்தக்க 'புதிய சைவம்' (New Saivam) உருவாகியது.

'காலனிய எதிர்ப்பு உயர்குழாம்' (Anti Colonial Resistance Elites) என்ற புலமைசார் புதிய சமூக அமைப்புத் தோன்றியது. இப்புலமைச் சமூக அமைப்பு கல்வி போதிப்பவர், சைவப் பிரசாரகர், புலவர், உரைகாரர், கண்டன ஆசிரியர், புராணபடனகாரர், பத்திராதிபர் முதலிய பலரை உள்ளடக்கியது. இப்புலமைச் சமூகத்தால் (Intellectual Society) கோயில்கள் மற்றும் பிரபுக்கள் மீதான பிரபந்தங்கள், உரைநூல்கள், பழந்தமிழ் நூற்பதிப்புகள், பாடநூல்கள், அகராதிகள், மொழி பெயர்ப்புகள், வசன நூல்கள், நாடகநூல்கள், புலவர் வரலாறுகள், ஆய்வு நூல்கள், கண்டன நூல்கள், தத்துவ நூல்கள், பத்திரிகைகள் முதலாய பன்முக வளத்தினை ஈழத்துத் தமிழியல் பெற்றுக்கொண்டது.

இக்காலத்தில், 'சைவத்தமிழ்' எனும் கருத்துநிலை (Saivaththamizh Ideology) தோன்றி வலுப்பெற்றது. சைவம், தமிழ் ஆகிய இரண்டும் ஒன்றிக்கலந்த ஓர் இணைவுநிலையான இக்கருத்து நிலை, சைவ சித்தாந்தத்தினைத் தமிழர் வாழ்வியலின் தளமாகவும் சாரமாகவும் முன்மொழிந்தது. வேதாகமங்களைவிடவும், இறைவனுக்கு மிகுந்த பிரீதி உடையவையாகத் தேவார திருவாசகங்களை அது முன்னிலைப் படுத்தியது. இக்கருத்து நிலை கிறிஸ்தவத்தையும் ஆங்கிலத்தையும் புறமொதுக்கி, சமஸ்கிருதத்தை உள்வாங்கியதாகவும் அமைந்தது. கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு எதிரான சைவமறுமலர்ச்சி இயக்கச் செயற்பாடுகளினால் 'குகசைவ சைவசித்தாந்தம்' (Guha Saiva Siddhanta) எனும் சைவ சித்தாந்தத்தின் புதுக் கருத்துநிலை உருவாக்கத்தையும் அடையாளம் காணமுடிகிறது. *(சுதர்சன், செ., 2019:154-162)*

ஆங்கிலேயக் காலனிய ஆட்சியில் யாழ்ப்பாணம் இந்தியாவின் மதறாஸ் மாகாணத்தின்கீழ் (Madras Presidency) விளங்கியது. "நாவலர் காலத்திலும் அவரது மறைவிற்குப் பின்னரான ஏறத்தாழ மூன்று தசாப்த காலங்களிலும் சென்னை எழுத்தறிவுச் சூழலில் யாழ்ப்பாணக் குழுமமே ஆதிக்கம் செலுத்தியது" *(கைலாசபதி, க. 2005:79)*. புவியியல் வரைபடத்தில், இலங்கைக்குத் தலையாக இருக்கும் யாழ்ப்பாணம், சென்னைக்கு மூளையாக விளங்கிய இக்காலத்தில்தான் அச்சுப்பண்பாடு வேர்வைத்து விருட்சமானது. காலனிய யாழ்ப்பாணம் பற்றிய இத்தகைய புரிதலோடு, சமயப் பிரசார நிலத்தில் சொற்களின் பயில்நிலை குறித்து நோக்கலாம்.

## சமயப் பிரசார நிலத்தில் அகராதிச் சொற்கள்

'உபதேசம்' என்பது ஒரு வாய்மொழிக் கலையாக ஆரம்பத்தில் இருந்ததால், 'மதத்தத்துவ போதனாமுறை' எனும் கருத்தில் 'உபதேசகலை' எனக் குறிக்கப்பட்டிருந்தது. (தமிழ் லெக்சிகன். *ப.423)* அந்தவகையில், உபதேசம் என்பது 'ஞானபோதனை', 'மந்திரோபதேசம்' எனும் கருத்தில், பக்குவப்பட்ட

உயிர்களுக்கானதாக அமைந்தது. இந்த ஆய்வின் பொருண்மைப் பரப்பு காலனிய காலமாக அமைவதால், அக்கால நிலவரத்தை ஒட்டி, உபதேசம், பிரசங்கம் ஆகியவை தொடர்பாக, காலனிய காலத் தமிழ் அகராதிகள் தரும் சுவாரசியமான விளக்கத்தை அறிவது பயனுடையது.

மிஷனரிகளில் ஒருவரான வின்சுலோ பாதிரியார் உருவாக்கிய 'எம். வின்சுலோ தமிழ் - ஆங்கில அகராதி' (1862), 'உபதேசம்' என்பதற்கு 'போதகம்', 'புத்தி', 'சமயாசாரவுபதேசம்', 'மந்திரோபதேசம்' ஆகிய நான்கு பொருள்களைத் தருகிறது. (1862:133) எனினும், அவ்வகராதி, 'உபதேசி' என்பதை வினையடியாகக் கொண்டு, 'புத்தி சொல்ல' அதன் வழி 'சம்மதிக்கச் செய்ய' (1862:133) என விரிக்கும் பொருள், 'கிறிஸ்தவர் அல்லாதவருக்குப் புத்தி சொல்லி, அவரைச் சம்மதிக்கச் செய்தல்' எனும் அகராதி தோன்றிய கால அர்த்தத்தைக் கற்பிக்கிறது. இன்னும், 'உபதேசி' என்ற வினையை நிகழ்த்தியவர் 'உபதேசி' (போதகன்) எனப் பெயருமாகினார். 'பிரசங்கம்' என்பதற்கு 'விரித்துப்பொருளுரைக்கை', 'பகிரங்கப்படுத்துகை', 'பிரபலம்', 'தெளிவு' ஆகிய நான்கு பொருள்களை அகராதி குறிக்கிறது. (1862:773) இந்நான்கு பொருள்களையும் முறையே, 'சமய உண்மையை விரித்துப் பொருளுரைக்கும்', 'மக்களுக்கு அதைப் பகிரங்கப்படுத்தும்', 'சமயத்தையும் அதன் கருத்தையும் பிரபலப்படுத்தும்', அதனால் 'மக்களைத் தெளிவடையச் செய்யும்' என விளக்கம் செய்தால், காலனியகாலச் சமய நிலவரங்களால் அவை அகராதி சொற்களானமையை உணர முடியும். 'பிரசங்கி' என்பதற்கு 'விளம்பரப்படுத்த', 'சாதுரியமாய்ப் பேச', 'வெளிப்படுத்த' ஆகிய மூன்று பொருள்களை அவ்வகராதி தருகிறது. (1862:773) இம்மூன்று பொருள்களையும் முறையே, 'சமயத்தையும் அதன் உண்மைகளையும் விளம்பரப்படுத்தும்', 'சுதேசச் சமயிகளிடம் சாதுரியமாய் உரையாடும்', 'வேதப்புத்தகத்தின் சுவிஷேசத்தை அவர்களுக்கு உண்மையென வெளிப்படுத்தும்' என விளக்கம் செய்தால், காலனியச் சமயப் பரப்புரைச் சூழலின் விளைவாக அவை அகராதிச் சொற்களானமையை உணரமுடியும்.

இங்கும், 'பிரசங்கி' என்ற வினையை நிகழ்த்தியவர் 'பிரசங்கி' என்னும் பெயர்நிலை பெறுகிறார். 'பிரசங்கமாய் வாசிக்க' (1862:773) என அகராதியில் வருவது, ஆலயத்தில் வேதப்புத்தக வசனங்கள் பிரசங்க பாணியில் வாசிக்கப்பட்டதை உணர்த்துகிறது. இது, பிரசங்கமுறை வழிபாட்டிடத்தில் புகுந்து, வழிபாட்டு முறையில் ஓர் ஊடகமாகிய நிலையை உணர்த்தி நிற்கிறது.

சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் உருவாக்கிய யாழ்ப்பாண அகராதி என்று அறியப்படும் மானிப்பாய்த் தமிழ் அகராதி (1842) 'உபதேச கலை' என்பதற்கு 'ஓரளவை' எனக் கூறி, 'கடவுட்டன்மையை அறிவித்தல்' என விளக்கம் தருகிறது. (1842:137) 'உபதேசகன்' என்பதற்கு 'உபதேசி' எனக்கூறி, 'உபதேசம்' என்பதற்கு 'சமயபோதகம்', 'தீட்சை, 'போதனை' ஆகிய மூன்று பொருள்களைக் குறிக்கிறது. (1842:137) 'பிரசங்கம்' என்பதற்குத் தரும் பத்துப் பொருள்களில் (1842:231) எட்டுப் பொருள்கள், பிரசாரகர்களின் சமயக் கருத்தாடலால் அகராதி அமைவுபெற்றவை. அவ் எட்டுப் பொருள்களையும் அக்காலச் சூழலைக் கருத்திற்கொண்டு பின்வருமாறு விளக்கம் செய்யலாம். 'உட்படுத்தல்' - பிற சமயத்தாரைத் தம் சமயக் கருத்தியலுக்கு உட்படுத்தல், 'கூட்டம்' - குறித்த சமய விசுவாசம் உள்ள கருத்தைச் சொல்வோனும் கேட்போனும் உள்ளடங்கிய குழு, 'தருக்க தீர்மானம்', 'நியாயத் தொடர்பு' - பிறர் சமயம் மறுத்து, தம் சமயக் கருத்தை நிறுவ அளவைப் பிரமாணம் கொள்ளல், 'தெளிவு' - தமது சமய உண்மைகளைப் பிற சமயத்தவரிடம் எடுத்துக்கூறி, அவர்களைத் தெளிவாக்கல், 'பிரபலியம்' - தம் சமய உண்மைகளைப் பிறசமயத்தார் மத்தியில் பெருமளவு அறியச்செய்தல், 'வாக்கியம்' - வேதப் புத்தக வசனங்களை விரிவாகப் பிறருக்குக் கூறுதல், 'வெளிப்படுத்தல்' - வேதப் புத்தக வசனங்களின் இறையியல் உட்கிடையைப் பிற சமயத்தார் உணரும் வகையில் தெரிவித்தல்.

தருக்க அறிவின் துணைகொண்டு நிகழ்ந்த சமயப் பிரசாரத்தினால், 'பிரசங்கித்தல்' என்பதற்கு 'தீர்மானமெடுத்துக் காட்டல்' (1842:232) என்ற பொருளும், பிரசாரகர்களைப் பிற

சமயத்துக்கு எதிராக, தம்சமய உண்மையைப் பரப்புக என அனுப்பியதால், 'பிரசங்கி' என்பதற்கு 'பிரசங்கியென்னேவல்' (1842:231) என்ற பொருளும் அகராதியுள் வரலாயிற்று. சமயப் பிரசாரகர்கள் கவரத்தக்க ஆடை, அணிகலன்களுடன் நட்சத்திர அந்தஸ்து உடையவர்களாகச் சமூகத்தில் வலம் வந்தமையால், 'பிரசங்கி' என்பதற்கு 'ஆடம்பரகாரன்' என்ற பொருளும் (1842:231) இக்கால அகராதியில் இடம்பெற்றமை சுவாரசியமானது.

மேற்குறித்தவற்றிலிருந்து, பிரசங்கியும் உபதேசியும் ஒரு பொருளையே குறிப்பதாயினும் சைவர்கள் பிரசங்கி என்பதிலிருந்தும் மிஷனரிகள் உபதேசி என்பதிலிருந்தும் கிளைத்த பதங்களையே கையாண்டனர். இன்னும், அவற்றைத் தத்தம் சமயநிலைநின்று ஒருவர் பதத்தை மற்றவர் எதிர்நிலையாகவும் கருதினர். ஒரு சமய வட்டத்துள் சமய உண்மையைப் பரப்பிய தன்மையிலிருந்து எதிர்ச் சமயத்தார்க்கும் அவற்றை வெளிப்படுத்தும், 'பலர் அறியச் செய்யும்' நிலையையும், சமயப் பரப்புகைக்கும், வழிபாட்டுக்கும் சொற்களைப் பிரக்ஞை பூர்வமாகப் பயன்படுத்திய நிலையையும் அவதானிக்கமுடிகிறது. இக்காலத்தில்தான், 'பிரசங்க பீடம்', 'பிரசங்க மேடை', 'பிரசங்காசனம்' முதலாய புதிய சொற்கள் உருவாகி தமிழ் அகராதிகளில் அமர்ந்துகொண்டன. காலனியப்படுத்தியவர் காலனியப்படுத்தப்பட்டவரின் மொழியில் புலமை பெறும்போது சொற்களைத் தம்தேவை கருதி எவ்வாறு அர்த்தம் செய்கிறார் என்பதையும், அவற்றை காலனியப்படுத்தப்பட்டவர் எவ்வாறு எதிரிடையாகக் கையாள்கிறார் என்பதையும், இருவேறு சமயப் பண் பாட்டைக் கொண்டவர்கள் சமூத்தையும் சமூகத்திலிருந்து மொழியையும் எதிர்கொண்டு பயன்படுத்திய தருணங்களை, அகராதிகள் எவ்வாறு கையகப்படுத்தியிருக்கின்றன என்பதையும், இதன்வழி கண்டுணர முடிகிறது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அச்சுப் பண்பாடு குறித்து நோக்கலாம்.

**யாழ்ப்பாணத்தில் அச்சுப் பண்பாடு**

"அச்செழுத்துமொழி கூட்டுத் தன்னிலையை உடைப்பதற்கான, சிதைப்பதற்கான தகுதியைப் பெற்றது." (கலையரசி, அ. 2013:66) காலனியப்படுத்தப்பட்ட மக்களைத் தனித்தனியே சிதைத்து, தனிமனித எழுவாய்களை (single subject) உருவாக்கும் தன்மையை, காலனியச் சமயப் போர்க்களத்தில் அச்செழுத்தின் முக்கிய பாத்திரமாகக் கருதுவது பயனுடையது.

யாழ்ப்பாணச் சுதேசிகள் அச்சியந்திரத்தைத் தம்வசப் படுத்தியதென்பது, ஆங்கிலேய ஆட்சி அதிகாரத்தை எதிர்ப்பதற்கான எழுத்துகளை வெளியிடுவதற்கல்ல என்பதும், கிறிஸ்தவக் காலனிய எதிர்ப்பை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளில், சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் கருத்தியலுக்கு இசைவான கூட்டுத் தன்னிலை உருவாக்கத்திற்கு முதன்மையளிப்பதற்காகவே என்பதும் ஊன்றி நோக்க வேண்டியவை. 'எழுதா எழுத்து' (சிவத்தம்பி, கா. 2002:36) நிலையில் அமைந்த அச்செழுத்தை, 'வாகன எழுத்து', 'யந்திர எழுத்து' என்றெல்லாம் அவர்கள் கொண்டாடிய நோக்கத்தை சமய இயக்கத் தேவையின் பின்னணியில் வைத்தே புரிந்துகொள்ளவேண்டும். 'எழுதா எழுத்து' என்று ஆய்வாளர் கூறுவதை, இதுவரை காலமும் எழுதாதவற்றை, எழுத மறைத்தவற்றை எழுதும் எழுத்தே 'எழுதா எழுத்து' என இன்னொரு விதமாகவும் புரிந்துகொள்ளலாம். காலனிய காலத்தில் அறிமுகமான பல புதிய அம்சங்களை யாழ்ப்பாணப் புலமையாளர்கள் தயக்கத்துடன் நோக்கி, ஏற்றுக்கொண்டாலும், அச்சு நவீனத்தைத் திறந்த மனதோடு வரவேற்றார்கள். அச்சு எழுத்து என்பதனுள் எழுத்தைப் பேணும் முறையை, பாதுகாக்கும் முறையை, பரப்பும் முறையை அவர்கள் கண்டதன் விளைவே அந்த வரவேற்புக்குக் காரணம். நூலின் ஆக்கமுறை, வடிவமைப்பு, அளவு ஆகியவற்றை அச்சு மாற்றியமைத்தது. காலனிய கால யாழ்ப்பாணப் புலமைவெளியைத் தீர்மானித்த அச்சு வாகனம், 'அச்சுப் புலமை மரபு' என்ற புதிய மரபையும் கூடவே வளர்த்துச்சென்றது. முக்கியமாக, இந்த அச்சுப்புலமை மரபு, சைவ மறுமலர்ச்சி

இயக்கத்தினரும் கிறிஸ்தவ மிஷனரிகளும் தத்தமக்கேயான கூட்டுத் தன்னிலைகளை உருவாக்குவதால் வளர்ச்சிகண்டது.

எழுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு அறிவுசார் செயற்பாடுகளின் ஊடாகச் சமய நடவடிக்கைகளில் ஈடுபடும் புரட்டஸ்தாந்து மிஷனரிகளே, யாழ்ப்பாணத்திற்கு அச்சுப் பொறியை அறிமுகம் செய்தனர். அவர்கள் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு அச்சியந்திரம் வந்த வரலாற்றை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி பின்வருமாறு பதிவு செய்கிறது.

> "அமெரிக்க மிஷனரிமார் அச்சியந்திரசாலை ஒன்றை ஸ்தாபிக்க, 1820 ஆம் ஆண்டு ஓர் அச்சியந்திரத்தை அமெரிக்காவில் இருந்தும் அதற்கு வேண்டிய எழுத்துக்கள் ஆகியவற்றைக் கற்குத்தாவில் இருந்தும் வருவித்தனர். இதுவே யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப் பட்ட முதல் அச்சியந்திரமாம். அமெரிக்க மிஷனரிமா ருக்கு உதவியாய் இருந்த பிறவுண்றிக் தேசாதிபதி, தம் ஆளுகைக்காலம் முடிந்து இங்கிலாந்துக்குச் செல்ல, 1920ஆம் ஆண்டு ஆளுகைசெய்த பாண்ஸ் தேசாதிபதி அமெரிக்க மிஷனரிமாரில் நன்மனமற்றவராய் இருந்து, அச்சுக்கூடம் நடத்த அமெரிக்காவிலிருந்து வந்த துரைமகனை (ஜேம்ஸ் கரட்) யாழ்ப்பாணத்தில் வசிக்கக் கூடாதென்று தடுத்தமையால் அத் துரைமகன் இந்தியாவுக்குப்போக, அந்த அச்சியந்திரமும் அதற்குரிய தளபாடங்களும் அம் மிஷனரிமாரால் சேட்சு மிஷனரிமாருக்கு விற்கப்பட்டன. சேட்சு மிஷனரிமார் (வண. ஜேசப் நைற்) அந்த அச்சியந்திரத்தை நல்லூரில் ஸ்தாபித்துச் சில புஸ்தகங்களைப் பிரசுரித்து வெளிப்படுத்தினர்... கோட்டன் தேசாதிபதி (1831-1837) புதிய மிஷனரிமார் வரக்கூடாதென விதித்த பிரமாணத்தை நீக்கிவிட... அவருள் மைனர் என்னும் பேருடைய அமெரிக்கத் துரைமகன் (இவர் அமெரிக்காவிலே அச்சகக்

> கலையில் தேர்ச்சி பெற்றவர்) யாழ்ப்பாணத்தில் அச்சியந்திரத்தை ஸ்தாபித்து நடத்த யாழ்ப்பாணம் வந்து, அமெரிக்க மிஷனரிமார் முன் சேட்சு மிஷனரிமாருக்கு (C.M.S) விற்ற அச்சியந்திரத்தையும் அதன் தளபாடங்களை யும் வாங்கி, மானிப்பாயில் ஸ்தாபித்து, அதைச் செம்மையாய் நடத்தி, அநேக புஸ்தகங்களை அச்சடித்துப் பரப்பினர்." (வேலுப்பிள்ளை, க. 1918:280)

யாழ்ப்பாணத்தில் 1918,ல் பன்னிரண்டுக்கும் அதிகமான அச்சுக்கூடங்கள் இருந்தன. நாவலர், வித்தியானு பாலனயந்திர சாலையை 1849,ல் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்தார். அதன் பின்னர், யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பல அச்சுக்கூடங்கள் நிறுவப் பட்டன. அச்சியந்திர வருகைக்கு முன்னர், "யாழ்ப்பாணத்திலே ஒரு காவிய ஏடு இரண்டு பொன் காதணிகளுக்குச் சமமாக இருந்தது" (சிவலிங்கராஜா, எஸ். 2008:25) என்ற நிலை மாறியது. எனினும், அச்சுத் தொழிலின் பெருக்கம் அச்சகங்களை இழுத்து மூடும் நிலைக்குத் தள்ளவும் தவறவில்லை. சமயப் பிரசாரத்தாலும் கல்வித் தேவைகளாலும் ஏற்பட்ட அச்சுத்தொழில் பெருக்கம் காரணமாக, ஆரம்பத்தில் தோன்றிய அச்சகங்களுக்கு வருமானம் குறைவுற்றது. இந்நிலை பத்திரிகைகள் பலவற்றிலும் எதிரொலித்தது. இது தொடர்பாக, இந்துசாதனத்தில் வெளிவந்த செய்தி ஒன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

> "யாழ்ப்பாணத்தில் ஒரு அச்சியந்திர சாலைக்குத்தானும் போதிய வேலையில்லாதிருப்ப, ஒருவரை ஒருவர் பார்த்து, எத்தனையோ அச்சியந்திர சாலைகள் ஸ்தாபித்து நடாத்தப்பட்டு வருகின்றனவே. இவ்வியந்திர சாலைக ளில் உள்ள அச்சியந்திரங்களெல்லாம் ஓயாதியங்கு கின்றனவா? ஒரு அச்சியந்திரசாலைக்குச் செல்லவேண்டிய லாபத்தை எல்லாரும் பங்கிட்டுப் புசிப்பதற்காகவே பல அச்சியந்திரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டனவேயன்றி அவற்றால் உள்ளவாறு லாபமடைதற்கன்று... ஒரு

தொழில் மலியும்போது அதன் வருவாயும் அத் தொழிலுடையார்க்குச் சிறிது சிறிதாக அருகுமன்றோ. நாம் ஒரு தொழிலைச் செய்ய ஆரம்பிக்கும் போது அத்தொழிலில் நமக்கு லாபம் வருமோவென்று தீர்க்காலோசனை செய்தலோடமையாது அத்தொழில் பிறருடைய வருவாய்க்கு இடையூறாயிருக்குமோ என்றுஞ் சிந்தித்தே அத்தொழிலைச் செய்தல் வேண்டும். ஒருவருடைய வருவாயையே நாமும் பகிர்ந்துண்டலாற் புண்ணியம் யாதுமில்லை. அச்செயல் தேசவன்பர்களுக்கு ஒருபோதும் அழகாகாது. (இந்துசாதனம்., *21.07.1909*)

சைவர்களும் கிறிஸ்தவர்களும் நிறுவிய அச்சகங்கள், சைவ மற்றும் கிறிஸ்தவ அடையாளங்களைச் சுமந்த இக்காலத்தில்தான் நூற் படைப்பு, அதன் பரவல் மற்றும் நுகர்வு குறித்த புலமைப் பரப்பின் விரிவாக்கத்தை, தமிழ்ச் சூழலில் அவதானிக்கமுடிகிறது. இதனை, 'காலனிய யாழ்ப்பாணத் தமிழ் நூற்பரப்பாக்கம்' என்ற என்ற கருத்தியலாகக் கட்டமைக்கலாம். பிரபந்தங்கள், சிறுநூல்கள், பிரசுரங்கள், பத்திரிகைகள், நிகண்டுகள், அகராதிகள், பாடநூல்கள், கண்டனங்கள், பதிப்புகள் முதலியவற்றால் பெருகிய இந்த வெளி, கடவுளையும் மன்னர் மற்றும் பிரபுக்களையும் பாடிப் பரவிய மரபையும் தாண்டி, நூல்களைப் பாடும், அதை அச்சிடுவித்தவரைப் பாடும், அதற்குப் பொருள் உபகரித்தவரைப் பாடும், நூலை அச்சிட்ட அச்சியந்திரசாலையை மற்றும் அச்சியந்திரத்தைப் பாடும் புதிய நிலையையும் எய்தியது. இப்புதுநிலைக்குச் சான்றாக, சைவப்பிரகாச யந்திரசாலைமீது,

"சைவப்ர காசயந்த்ர சாலையிது குன்றாம
லெவ்வெப் பகலு மினிதாகச் - செவ்விச்சீர்
வண்ணைநகர் வாச வயித்தியலிங் கப்பெருமான்
றண்ணளியா லோங்கத் தகும்." (சி.பி.பெ.தி., *2014:524*)

எனச் சிவசம்புப் புலவர் பாடிய வெண்பாவைக் குறிப்பிடலாம். இவ்வாறு அமைவுபெற்ற 'காலனிய யாழ்ப்பாணத் தமிழ்

நூற்பரப்பாக்கம்' என்பதனுள் 'சைவத் தமிழ் நூற் பரப்பாக்கம்', 'கிறிஸ்தவத் தமிழ் நூற் பரப்பாக்கம்' என்னும் இருவேறு வெளிகளையும் அவற்றின் ஊடாடுதலையும் அவதானிக்கும்போது, அதிகம் வெளித்தெரிவது சிறுநூல்களும் அவை நிகழ்த்தும் சமயக்கருத்தாடல்களுமே. இந்தப் பின்னணியில், சிறுபுத்தகங்களின் வருகையை நோக்குவது பயன் தரும்.

**சிறுபுத்தகங்களின் வருகையும் பெருக்கமும்**

கிறிஸ்தவத்தைப் பரப்ப மிஷனரிகள் மேற்கொண்ட முயற்சிகளும் இவற்றுக்கு எதிரான சைவச் சுதேசிகளின் சமயக் காப்பு முயற்சிகளும் மொழி மற்றும் இலக்கியத் தளத்தைப் புதிதாக்கியது. 1804 இல் இலண்டன் மிஷனரி சபையும், 1812 இல் பப்ரிஸ் மிஷனரிச் சங்கமும் 1814 இல் வெஸ்லி மிஷனும் 1816 இல் அமெரிக்கன் மிஷனும் 1818 இல் சேர்ச் மிஷனும் கிறிஸ்தவமதப் பரப்புகைக்காக இலங்கைக்கு வந்தன. இச்சபைகளைச் சார்ந்த மிஷனரிகள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் சமயப் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அமெரிக்க மிஷனரிகள் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு செயற்பட்டனர். அமெரிக்க மிஷனரிகளின் சமயப் பரப்புகை நடவடிக்கைகளே யாழ்ப்பாணச் சைவர்களுக்குச் சவாலாக அமைந்தது எனினும், ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க மதப் பரப்புகையும் இடம்பெற்றது என்பது மறுப்பதற்கில்லை.

யாழ்ப்பாணத்தில் அச்சுப்பண்பாட்டின் மேலெழுகையும் ஸ்திரப்பாடும் சைவ மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையிலான சமயம்சார் கருத்தியல் மோதலால் நிகழ்ந்தேறின. சிறிய அளவிலான புத்தகங்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிவந்தன. மிகக் குறைவான அளவு பக்கங்களைக் கொண்டமைந்த இந்தப் புத்தகங்கள், குறுகிய நேரத்தில் வாசிக்கக்கூடியவையாய் அமைந்தன. காலனிய காலத்தில் இவற்றைச் 'சிறுபுத்தகங்கள்' என்றே அழைத்தனர்.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தமிழ் பேசும் மக்களுக்குக் கிறிஸ்தவக் கருத்துக்களைப் பரப்புவதற்காக, 1823 இல் யாழ்ப்பாணத் துண்டுப்பிரசுர சங்கம் என்று அறியப்படும் The Jaffna Religious Tract Society நிறுவப்பட்டது. அது, 1862ஆம் ஆண்டிற்குள் அறுபது இலட்சம் சிறு பிரசுரங்களையும் சிறு புத்தகங்களையும் அச்சிட்டுப் புழக்கத்திற்கு விட்டது. (The Ceylon Overland bimonthly Examiner, June 28, 1862, Vol. X. No.12)

அமெரிக்க மிஷனரி ஜேம்ஸ் கெரட் (James Garrett) என்பார், தாம் அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்திருந்த கை அச்சுப்பொறியை (hand press) நல்லூரில் சேவையாற்றிய சேர்ச் மிஷனரி சங்கத்தைச் (Church missionary Society) சேர்ந்த வண. ஜோசெப் நைற் (Rev. Joseph Knight) என்பவருக்கு விற்றார். இதனை வாங்கிய அவர் 1826 இல் நல்லூரில், தனது அச்சகத்தை ஸ்தாபித்தார். இந்த அச்சகம் ஆரம்பித்த மூன்று ஆண்டுகளில் 1,002,800 பக்கங்களை அச்சிட்டது. அனைத்துமே சிறுபுத்தகங்களாக அமைந்தன. முத்திவழி (The Way to Paradise) என்ற முக்கியமான முதல் புத்தகம் இங்குதான் அச்சிடப்பட்டது. 1833 இல் The Little Catechism என்ற நூலின் 10,000 பிரதிகள் அச்சிடப்பட்டன. நல்லூரிலிருந்த அச்சுக்கூடம் பின்னர் மானிப்பாய்க்கு இடம் மாறியது. அமெரிக்க சிலோன் மிஷனின் (American Ceylon Mission) ACM அச்சகம் 1834 இல் மானிப்பாயில் நிறுவப்பட்டது. 1850 இல் இந்த அச்சகத்தில் 70 பேர் வேலை செய்தனர். மானிப்பாய் அச்சகத்தில், துண்டுப்பிரசுர சங்கத்தினருக்கான சிறுபுத்தகங்கள் அதிகம் அச்சிடப்பட்டாலும், பாடசாலைப் பாடப் புத்தகங்களும் பைபிளின் சில பகுதிகளும் அச்சிடப்பட்டன. 1834 இல் 'சாலமனின் பாடல்கள்' (Songs of Solomon) ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டது. பொது வழிபாட்டிற்காக வேதாகம சங்கீதங்களின் (Psalms) சில பகுதிகள் கெட்டி மட்டையில் அச்சிடப்பட்டன. மிஷனின் தேவைக்காக, 'இலக்கணச் சுருக்கம்' என்ற நூலின் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டன. யாழ்ப்பாணத்தவரின் சமய, கல்வித்

தேவைகளுக்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் பெருந் தொகையான சிறுபுத்தகங்களை மானிப்பாய் அச்சகம் வெளியிட்டது. 1834 இற்கும் 1854 இற்கும் இடைப்பட்ட காலத்தில், 171,747,198 எண்ணிக்கை கொண்ட பக்கங்கள் அங்கு அச்சிடப்பட்டன. இவ்வாறெனில் சராசரியாக, ஆண்டிற்கு 80 இலட்சம் பக்கங்கள் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இவற்றில் மூன்றில் ஒரு பகுதி 'தேவனின் வார்த்தைகள்' பற்றிய சிறுபுத்தகங்களாக அமைந்தன. இன்னும், சமயப் பொழிப்பு 1000 பிரதிகளும், திருவிழா நடைமுறை 5000 பிரதிகளும் நாவழு 5000 பிரதிகளும் தேவவாக்கியம் 3000 பிரதிகளும் குருட்டுவழி 3000 பிரதிகளும் சிறுபுத்தகங்களாக அச்சிடப்பட்டன.

மதுரையில் 1834 இல் ஒரு மிஷன் அமைக்கப்பட்டதாயினும், அச்சுக்கலையைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மிஷனே அதில் தனியுரிமை பெற்றதாய் இருந்தது. ஓர் அச்சு இயந்திரத்தை வழங்கியோ அல்லது அச்சுக்கலை தெரிந்த ஒரு மிஷனரியை அனுப்பியோ உதவுமாறு மதுரை மிஷன் விடுத்த வேண்டுகோளை, யாழ்ப்பாண மிஷன் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தெல்லிப்பளையில் 1904 இல் மிஷனால் அமைக்கப்பட்ட அச்சகமானது, ஒராண்டிற்குள் இருபது இலட்சம் தாள்களை அச்சிட்டது. அவை சமயப் பரப்புகை சார்ந்த சிறுபுத்தகங்க ளாக அமைந்தன. இவ்வாறு சமயப் பரப்புகைச் சிறுபுத்தகங்கள் பெரு வாரியாக வெளிவந்திருந்தும், மக்களின் கல்வி முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தி, சைவர்களைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது என்ற நிறுவன நோக்கத்தில் அதிகம் வெற்றியடையவில்லை என்ற முடிவுக்கு வந்த, ஈ.பி. ஹாஸ்ரிங் (E.P.Hastings) என்பார் தமது ஆளுகையின் கீழிருந்த வட்டுக்கோட்டை செமினரியை 1855 இல் மூடினார் என்பது வரலாறு. (A Brief history of the American Ceylon Mission Press, 1956)

மேற்குறித்த சூழல் உபதேசிகள், பிரசாரகர்கள் ஆகியோரை விடவும் சிறுபுத்தகங்களை முதன்மையாக்கியது. சமயப் பரப்புகை

வெளியில் பிரசுரகாரர்களைப் பின்தள்ளி, பிரசுரமான சிறுபுத்தகங்கள் முன்னரங்கிற்கு வந்த தன்மையை உதயதாரகை பின்வருமாறு பதிவுசெய்தது.

> "நான் துணைக்காரரை உபயோகமாகச் செய்வதைப் பார்க்கிலும், அச்சுச் சூத்திரத்தினாற் செய்வததிகமென்பது என் மனத்திற்குத் திருட்டாந்தமாயிருக்கின்றது. பிரசங்கத்திற் பெரிய காரியந்தான், ஆனாலும், அது முதன்மை பெற்றதல்ல. ஏலாத சிறிய காரியத்தைப் பிரசங்கத்தினாலேதான் செய்யக்கூடும். ஆனாலும், அச்சுச் சூத்திரமோ பெரிய காரியத்தைச் செய்யக்கூடும். சிறுபுத்தகங்கள் எங்கும் செல்லக்கூடும்." (28.2.1850)

சிறுபுத்தகப் பண்பாடு, சமயப்பிரசார அடிப்படையில் தோற்றம்பெற்றது எனினும், அது பிரக்ஞை பூர்வமாவே நிகழ்ந்தது என்பதை மேற்படிகூற்றுப் புலப்படுத்துகிறது. கிறிஸ்தவ மிஷனரிகளே இதற்கு வித்திட்டனர்.

நாவலர் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்த வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை மையமாகக்கொண்டு, 1864ஆம் ஆண்டு 'பரமத கண்டனஞ் சுயமத ஸ்தாபன சங்கம்' எனும் பெயரில், சங்கம் ஒன்றினைச் சங்கரபண்டிதர் ஆரம்பித்தார். இச்சங்கத்தில் சைவத்தமிழ்ப் புலமையாளர்கள் பலரும் அங்கம்வகித்தனர். இவர்கள், ஒரு வாரம் பிறமத கண்டனமும் மறுவாரம் சுயமத ஸ்தாபனமுஞ் செய்யும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டனர். 'சம்பளக் கிறிஸ்தவர்', 'பதுங்கினர் பாதிரிமார்' முதலாய தொடர்களைப் பயன்படுத்தி கிறிஸ்தவப் பரப்புகைகளை கண்டித்தனர்.

யாழ்ப்பாணத் துண்டுப் பிரசுர சங்கம் தனது முதன்முயற்சியாக 'சிறுபுத்தகத்தால் வரும் பலன்' என்ற பெயரிலேயே ஒரு சிறுபுத்தகத்தை வெளியிட்டது. இரண்டாவது பதிப்பில்

'இரண்டாவது பதிப்பு பத்தாயிரம் பிரதிகள்' எனக் குறிப்பும் உள்ளது. சிறுபுத்தகத்தின் முக்கியத்துவம் தொடர்பாக அதில் குறிக்கப்படும் ஒரு பகுதி வருமாறு.

> "அற்ப சிற்பி முத்தைத் தரும், சிறிய முத்து அதிக பொன்னைப் பெறும். அற்ப கரி வச்சிரத்தை விளைக்கும்... இரு புறமுங் கருக்குள்ள வேதவசனத்தின் ஒரு சொல் ஒரு சிறு புத்தகத்திலிருந்து அநேக ஆத்துமாக்களைச் சீர்ப்படுத்தி நித்திய சீவனுக்கு ஊற்றாகாதா?.... இப்படிப்பட்ட சிறுபுத்தகங்கள் ஒரு குருவாகிலும் உபதேசியாகிலும் இல்லாத தேசங்களுக்குப் போகிறதல்லவா? குருவுக்கும் உபதேசிக்கும் முடியாத செயல்களைச் செய்து முடிப்பது சிறு புத்தகந்தான்.... ஒரு சிறு புத்தகங் குருவுக்குங் கிறிஸ்தவர்களுக்கும் உபயோகமாயிருந்து அவர்கள் வேலையை நடப்பிக்கிறது. இந்தச் சிறுபுத்தகமில்லாத சங்கங் கொழுவில்லாத ஏராளன். இதுவே நாவில்லாத உபதேசி... சிறு புத்தகங்களை எடுத்து அவ பாவனை பண்ணி மருந்துகட்டிப் பட்டம் ஒட்டிக் கெடுத்ததினால் வருந் தோஷம் புத்தகத்துக்கல்ல, புத்தகத்தைச் சேதப்படுத்தின வனுக்கே ஆகும்." *(1877:1-4)*

மறுபுறத்தில், மிஷனரிகளின் அத்தகைய வெளியீடுகளைச் சைவப் பிரசாரகர்கள் கண்டித்தனர். காலனிய காலம் முழுவதுமே இந்தக் கண்டனங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. "கிறிஸ்தவ மார்க்கத்தைப் புகழ்ந்தும், இந்துமார்க்கத்தை இகழ்ந்தும் பல்லாயிரம் தினுசான புத்தகங்களை நியாயவிரோதமாக மிகுந்த துணிகரத்துடன் அச்சிட்டுக் கொடுத்தல். அதேமாதிரியான சிறு துண்டுப் பத்திரிகைகளை வெளியிடல். மாதாந்தரமாகவும் வாரக்கணக்காகவும் பத்திரிகைகளை வெளியிடல். பைபிள் புத்தகத்தை நமது தேச பாஷைகளில் அச்சிட்டுச் சொற்பவிலையாக விற்பனை செய்தல்" (இந்துசாதனம்.,12.03.1901) முதலிய

செயற்பாடுகள் கண்டிக்கப்பட்டிருந்தன. சைவமறுமலர்ச்சி இயக்கத்தினர் தமது சமய உண்மைகளைச் சிறுபுத்தக வடிவில் வெளியிட்டமை என்பது மிஷனரிகளின் சிறுபுத்தக முயற்சிகளின் பிரதிபலிப்பே என்பதும் 'ஆறுமுகநாவலருக்கு முன்னர் மிஷனரிகளுக்கான மறுப்பினை இயக்க ரீதியாக யாரும் மேற்கொள்ளவில்லை' (ஜெபநேசன், எஸ்., 2007:50) என்பதும் மனங்கொள்ளத்தக்கவை.

கிறிஸ்தவப் பிரசாரகர்கள் நற்கொடை, நற்சமயம், சிறுபுத்தகத்தால் வரும் பலன், துன்னெறி விலக்கு, குலாசாரம், ஆத்தும இரட்சிப்பு, இந்துமத பாப்புமத சம்பந்த தீபம், மும்மூர்த்தி இலட்சணம், உருத்திர, இலட்சணம், வேதமொழி, உரோமை மார்க்கத்தார் கொடுக்கிற எதிர்மொழிக்கு மறுமொழி, ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், சைவர் ஆட்சேப சமாதானம், புதுச்சைவம், சைவமும் மச்சமாமிசமும், சமய ஆராய்ச்சியும் நேர்மையும், மிருகபலி ஆராய்ச்சி, பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி, சுப்பிரமணிய சரித்திர ஆராய்ச்சி முதலாய பல சிறுபுத்தகங்களை வெளியிட்டனர். சைவப் பிரசாரகர்கள் சைவ விரோதம், சைவ சமயி, சைவ சமயம், சமயம் சமயம், இது நல்ல சமயம், சுப்பிரபோதம், விவிலிய குற்சிதம், கிறித்துவப் பல பிரிவினை, சைவகண்டன பரிகரணம், மிலேச்ச மத விகற்பம், சிவ தூஷண கண்டனம் சைவ மகத்துவ பானு, சபிண்டி நாடக சங்காரம், சிவனுந்தேவனோ என்ற தீய நாவுக்கு ஆப்பு முதலாய பல புத்தகங்களை எழுதி வெளியிட்டனர்.

இச்சிறுபுத்தகங்களை சமய உண்மைகளை விளக்குபவை, பிற சமயக் கண்டனம் சார்ந்தவை, ஆலயங்கள் பற்றியவை, பட்டினங்கள் பற்றியவை, சமூகம் பற்றியவை, தனிநபர்கள் குறித்தவை எனப் பலவாறு வகைப்படுத்த முடியும். இவை பெரும்பாலும் உரைநடை வடிவிலும் சிறுபான்மை செய்யுள் வடிவிலும் அமைந்திருந்தன.

அச்சு ஊடக வருகை நாவில்லா உபதேசிகளான பல பிரசுரங்களைத் தமிழுக்குத் தந்தது. இக்காலச் சிறுபுத்தகங்களை அடிப்படையாக் கொண்டு, குறித்த சமயத்தின் விரிவான கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தல், இலக்கு வாசகராக எதிர்ச் சமயத்தாரைக் கொண்டிருத்தல், அபிப்பிராய பேதமின்றிப் புத்தகத்தை ஏற்கவேண்டுமென வலியுறுத்துதல், சிறுபுத்தகத்தை அவமதித்தல் பாவம் என்றுகூறி அதற்குப் புனிதம் கற்பித்தல், சிறிய செய்தியொன்றைப் பரப்பினால் அது பெருகும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தல், சிறுபுத்தகத்துள் சமய மூலநூலின் கருத்து அடங்கியது எனும் உறுதி கூறல், வாசிப்பவனை வயப்படுத்தி அவனைச் சமய உண்மையைத் தேடி வாசிக்கச் செய்யும் ஆற்றல் உள்ளது எனும் நம்பிக்கையை வெளிப்படுத்தல், குருவை நாடும் வழியைக் காட்டுதல், சமயம்சார் வரலாறு மற்றும் புராண இதிகாசக் கதைகளைக் கூறி சமய உண்மைகளை மக்களுக்கு எளிதாகப் புரிவைத்தல், எளிதில் வாசிக்கக்கூடியதாக இருத்தல், குருவும் உபதேசியும் போகாத இடங்களில் எல்லாம் போகும் வல்லமை பெற்றிருத்தல், இலவசமாக வழங்குவதற்கு வசதியாய் அமைதல் மக்களிடம் சுலபமாகவும் விரைவாகவும் சென்றுசேரும் ஆற்றல் பெற்றிருத்தல், சமயப் பிரசார நிறுவனம் ஒன்றின் இயக்கியாக அமைதல் முதலாயவற்றைச் சிறுபுத்தகங்களின் பண்புகளாகக் குறித்துக்கொள்ளலாம். இத்தகைய புரிதலோடு யாழ்ப்பாணத்தில் சமயக் காலனியம் பற்றிச் சுருக்கமாக நோக்கலாம்.

## யாழ்ப்பாணத்தில் சமயக் காலனியம்

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னரேயே போர்துக்கேசரும், ஒல்லாந்தரும் தங்களது ஆட்சியை நிலைநிறுத்தவும் கிறிஸ்தவத்தினைப் பரப்பவும் சைவாலயங்களை அழிப்பதிலும் சைவ வழிபாடுகளை மறுப்பதிலும் ஈடுபட்டனர். ஆலயத்தை அழித்தல் என்பது, அதை மையமாகக்கொண்டியங்கிய உள்ளூர் நிலப்பிரபுத்துவ அதிகாரத்தை அகற்றும் தன்மையையும் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் வந்த ஐரோப்பிய மிஷனரிகள் தாம் எழுதிய குறிப்புக்களில், தம் வருகைக்கு முன்னரான சைவாலய

அழிவுகளைப் பதிவுசெய்தனர். மிஷனரிமார்களில் ஒருவரான ஹரியற் எல். வின்சிலோ (Harriet L. Winslow) என்பார் தமது நாட்குறிப்பில் பதிவுசெய்யும் பின்வரும் பகுதியை நோக்கலாம்.

> “போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திலே தமது வர்த்தக மையங்களை நிறுவியவேளை, றோமன் கத்தோலிக்க மதத்தை நிறுவினார்கள். கடவுள் நம்பிக்கையற்ற மக்களின் கோயில்களை அழித்தனர். தமது வழிபாட்டிடங்களையும் ஆலயங்களையும் கட்டினார்கள். உள்ளூர்வாசிகளிற் பலரைத் திருமுழுக்கு எடுக்கும்படி வற்புறுத்தினர். ஆனால், 1656ஆம் ஆண்டு, ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் தமது ஆட்சி பலத்தையும் அதனூடான செல்வாக்கையும் பயன்படுத்தி, போர்த்துக்கேயரைப் போலவே புரட்டஸ்தாந்து மதத்தின் விசுவாசத்தை வெளிப்படுத்தினர். அவர்கள், கடவுள் நம்பிக்கையற்றோரின் இடிக்கப்பட்ட ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் சமய வழிபாடுகளைப் பகிரங்கமாக நிகழ்த்தவும் இடமளிக்கவில்லை” (ஹரியட் வின்சிலோ., 1835:182-183)

மேற்குறித்த பதிவிலிருந்து சைவர்களின் ஆலயங்கள் அழிக்கப்பட்டமையும் சைவ வழிபாடுகள் மறுக்கப்பட்டமையும் மத மாற்றத்துக்கு வற்புறுத்தப்பட்டமையும் புலனாகின்றது. ‘கடவுள் நம்பிக்கையற்ற மக்களின் கோயில்களை அழித்தனர்’ என்னும் குறிப்பு, சுதேசிகளின் சமயத்தினை அவர்கள் சமயமாகக் கருதவில்லை என்பதையே புலப்படுத்துகிறது.

ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவக் காலனியம் மிகவும் தந்திரோபாயமான முறையில் அமைந்திருந்தது. சலுகைகளை வழங்குவதன் மூலம் சைவர்களின் மனதை வெல்லுதல் மட்டுமன்றி சமயத் தத்துவார்த்த அடிப்படையிலான போரையும் அது நிகழ்த்தியது. சுதேசிகளின் சைவம்சார் மன அமைப்பைத் தகர்த்து,

அதற்குப் பதிலாக அவர்களைக் கிறிஸ்தவம்சார் மன அமைப்புக்கு ஏற்புடையதாக்குவதே அவர்களின் செயற்றிட்டமாக இருந்தது. சுதேசிகள் கட்டிய ஆலயங்களை அழிப்பதைவிடவும், சுதேசிகளை நெருங்கி, அவர்களின் சைவ மன அமைப்பை அழித்து, அத்தகைய மன அழிபாடுகளின்மேல் கிறிஸ்தவக் கருத்தியலைத் தேவாலயமாகக் கட்டுவது மிஷனறிகளின் இலக்காக இருந்தது. இந்த நோக்கத்தோடு தீவிரமாக ஈடுபட்டவர்களில் ஒருவரான ஹரியற் வின்சிலோ அவர்கள் *09.08.1821* அன்று, தமது நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதினார்.

> "தவறான சித்தாந்தக் கருத்துக்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் நீக்குவதற்கு உண்மையான அறிவியலைக் கற்பிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. இங்கு நடைபெறும் விக்கிரக வழிபாட்டின் முழுஅமைப்பும் - ஏற்கமுடியாத புவியியல், வானியல் அமைப்புக்கள், இயற்கை அறிவியலில் காணப்படும் உதவாத கற்பனைக் கதைகள் - ஆகியன இவற்றின் அடிப்படையில் தங்கியிருப்பதைக் காண்கிறோம். இக் கொள்கைகள் பரிசோதனை மூலமும் தவறானவையென நிரூபித்துக் காட்டலாம். ஆம், உண்மையான அறிவியலைப் பரப்பும்போது, சாத்தானின் கோட்டை தகர்க்கப்படும். இந்த இடிபாடுகளின்மேல் கடவுளின் ஆலயத்தைக் கட்டியெழுப்பலாம்." (ஹரியற் வின்சிலோ நாட்குறிப்பு. *09.08.1821)*

மேற்குறித்த கூற்றிலிருந்து, சுதேசிகள் கொண்டிருந்த சமயம் சார் மன அமைப்பைக் கவனத்திற்கொண்ட கிறிஸ்தவக் காலனியத்தின் யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ளலாம். இதற்காக அவர்கள் மேற்கொண்ட செயல்திட்டங்களில் இரு அம்சங்கள் முக்கியமானவை. அவற்றில் ஒன்று, சைவர்களைத் தூய ஆவியானவரால் ஒளிரச்செய்தல். மற்றையது, நற்செய்திக்கு ஒவ்வாத விக்கிரக வழிபாட்டினைக் கடிதல்.

சைவர்களைத் தூய ஆவியானவரால் ஒளிரச்செய்யும் அணுகு முறையானது, அக்காலத்துச் சைவ நிலவரங்களைக் கேலியோடு விமர்சிப்பதும் கேள்விக்குள்ளாக்குவதுமாய் அமைந்தது. பயில்நிலையிலிருந்த சைவப் பிரதிகள், வழிபாடுகள், நம்பிக்கைகள் குறித்த மிஷனரிமாரின் பதிவுகள் யாவுமே கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் அவர்கள் கொண்டிருந்த தீவிர நிலையைக் காட்டுகின்றன. இவ்விடத்தில், ஹரியற் எல். வின்சிலோ அவர்கள் *05.11.1820* திகதி எழுதிய நாட்குறிப்பு ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமானது.

> "ஒரு மனிதன் செய்த பாவத்தை இல்லாமல் செய்யும் சமயக் கிரியைகள் என்றும் இவற்றைத் தகுந்தமுறையில் அனுசரித்தால் இறப்பின் பின்னர் மகிழ்ச்சியான வாழ்வை அடையலாம் என்றும் நம்புகின்றனர். எனவே பாவத்தின் விளைவைப் பற்றிய பயத்தை இவர்கள் மனதில் உண்டாக்குவது, இவர்கள் மனச்சாட்சியை விழிப்படையப் பண்ணுவது, எந்தமுறையிலும் முடியாத செயலாகத் தோன்றுகிறது. ஆனால், தூய ஆவியானவரினாலேயே இவர்களின் இருளடைந்த உள்ளத்தை ஒளிரச் செய்ய முடியும்." (ஹரியற் வின்சிலோ., *05.11.1820*)

கிறிஸ்தவ மிஷனரிகள் சைவர்களின் விக்கிரக வழிபாட்டை, பைபிளின் நற்செய்திக்கு ஒவ்வாமை எனக் கண்டனர். அவர்கள் விக்கிரக வழிபாட்டின்மேல் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

> "நாங்கள் கூறும் நற்செய்தியை, தங்கள் நித்தியானந்தத்தை இழக்கும் தறுவாயிலுள்ள இம்மக்கள், ஏளனமாகக் கருதுவதைக் கண்டு வேதனையடைந்தோம். கிறிஸ்துவின் நாமத்தை நிந்தித்து, கேலி செய்து, அக்கிரமங்களினால் மாசடைந்த மக்களின் பாவக்கறை நீங்க அவரின் திருஇரத்தம் வழங்கப்பட்டது என்பதை இவர்கள்

ஏற்காதிருக்கின்றனர். மேலும், இவர்கள் மரம், கற்கள், பொன், வெள்ளி ஆகியவற்றினால் செய்யப்பட்ட ஜீவனற்ற விக்கிரகங்களை வழிபடுவதைக் காண்பது மிக்க மனவருத்தத்தை அளிக்கிறது." (ஹரியற் வின்சிலோ., *08.10.1821)*

மேற்குறித்த பதிவு, ஆங்கிலேயர்கால மிஷனரிமார், சைவ வழிபாடுகள் மற்றும் விக்கிரக வணக்கம் முதலாயவற்றை விமர்சித்து, சைவத்தைச் சமயமல்ல எனப் புறமொதுக்கிய, மனிதனின் ஈடேற்றத்திற்குக் கிறிஸ்தவமே வழி என வலியுறுத்திய நிலையையே காட்டுகிறது.

கிறிஸ்தவக் காலனியத்தை யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்த மிஷனரிகள் மேற்கொண்ட முயற்சிகளும் அவற்றிற்கு எதிரான சைவ மதத்தினரின் செயற்பாடுகளுந்தான், இக்கால எழுத்துலகைத் தீர்மானித்தன. மிஷனரி ஊழியக்காரர் கிறிஸ்தவத்தைத் தவிர யாழ்ப்பாணத்தில் நிலவிய எந்தச் சைவங்களையும் சமயங்களாகக் கண்டுகொள்ளவில்லை. 'சைவாகம உணர்ச்சி' நிலையில் நின்ற சைவர்கள், அவ்வுணர்ச்சியால் விலத்தப்பட்ட சைவர்கள் எனும் இரு சாராரையுமே 'குணப்படுத்த வேண்டியவர்கள்', 'அஞ்ஞானிகள்', 'ஆவி எழுப்புதல் வேண்டியவர்கள்', 'பாவத்தில் இருப்பவர்கள்', 'இரட்சிப்புப் பெறாதவர்கள்', 'இருண்ட மனத்தினர்' என்றே மிஷனரி ஊழியக்காரர் பதிவுசெய்தனர். யாழ்ப்பாணச் சைவர்களின் உள்ளத்தை தூய ஆவியானவரால் ஒளியூட்டலாம் என நம்பி, யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவம் காலூன்றியதன் விளைவு, காலனிய காலத்து ஈழ - தமிழ்நாட்டுச் சூழலைச் சமயப் போர்க்களமாக்கியது. மிஷனரி ஊழியக்காரருக்கு எதிராகச் சைவமறுமலர்ச்சி இயக்கத்தினர் சைவ ஊழியம் புரியத் தொடங்கினர். கிறிஸ்தவக் காலனியம் முன்னெடுத்த கல்வி, தொழில், வணிகம், அச்சு முதலாய நவீனமயமாக்கல் செயல் திட்டங்கள், இலங்கையின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களைவிடவும் யாழ்ப்பாணத்தை உயர் நவீன சமூக அந்தஸ்து நிலைக்கு உயர்த்தின.

சமயத்தில் சீர்திருத்தம் விரும்பிய சைவமறுமலர்ச்சி இயக்கத்தினர் சைவத்தின் பழைமையை அதேவடிவத்தில் உயிர்ப்பிக்கவில்லை. அதனை, தம்மை எதிர்க்கும், ஆதிக்கம் செலுத்தும் புரட்டஸ்தாந்துக் கருத்தியலின் வடிவுக்கு ஏற்ப உயிர்ப்பித்தனர். அதாவது புரட்டஸ்தாந்து மதத்தின் கட்டமைப்பைப் பெற்று உயிர்ப்பித்தனர். இதனால், மிஷனரிகளின் சமயஞ்சார் கருத்தியல், சைவமறுமலர்ச்சியாளர்களின் நவீன சைவத்திலும் புகுந்துகொண்டது. மேலைத்தேயச் சிந்தனை, கிறிஸ்தவம், காலனிய நலன் ஆகியவற்றின் பண்புகள் நவீன சைவத்தில் தெளிவாக வெளிப்பட்டன.

'**புதுச்சைவமும் சூத்திரப் பிரசங்கமும்**' என்ற தலைப்பில் மிஷனரிகள் வெளியிட்ட பிரசுரத்தின் பகுதி ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

> "தற்காலச் சைவர் இதிகாச புராணங்களில் சொல்லப்படுகிற தெய்வ வணக்கத்தையும் விட்டு, ஆகம சாஸ்திரங்களி லுள்ள வழிபாடுகளையும் ஒதுக்கிக் கொண்டு ஒருவகைக் கிறீஸ்தவ சைவம் ஒன்றை உண்டாக்கிக்கொண்டு வருகிறார்கள்." (09.09.1913)

மேற்குறித்த கருத்தின் ஆய்வுசார் முடிவுகளாக, "வரலாற்று நிலைமைக்குள் சூழமைக்கப்பட்ட நாவலரது சைவம் தூய்மைவாத நிலைப்பாடுடையதாகவும் - குறிப்பாக ஒரு 'புரட்டஸ்தாந்துச் சைவமாக' மீள் ஒழுங்குபடுத்தப்பட்டது" (2009:65) என்று அகிலனும் "சைவ மறுமலர்ச்சி இயக்கம், புரட்டஸ்தாந்து மதக்கட்டமைப்பினுள் சைவத்தைத் தகவமைப்பதாகவும் ஆகமமயப்படலை ஊக்கப்படுத்துவதாயும் அமைந்திருந்தது" (2018:xvi) என்று சானாதனனும் கூறுபவை அவதானிக்கத்தக்கவை.

முன்னெப்போதும் இல்லாதவாறு அச்சேறிப் பரவலடைந்த சைவப் புனித நூல்கள், அவற்றையொட்டி எழுந்த இலக்கியங்கள்,

அவற்றின் மீதான உரையாடல்கள் நவீன சைவத்தின் வடிவமைப்பில் முக்கியம் பெற்றதுடன் அதனை மேலும் வலுவுடையதாக்கின. கருத்தியல் ரீதியாக, யாழ்ப்பாணத்தின் சமூக அதிகாரப்படிநிலை வேறுபாடுகள் நவீன சைவத்தில் பிரதிபலிப்பினும், சமயக் காலனிய காலத்தில், அதனை எதிர்கொள்ளும் வகையிலான சைவம், சைவ மறுமலர்ச்சியாளர்களால் கட்டமைக்கப்பட்டது. இதுவரை காலமும் ஈழத்தில் பின்பற்றுநிலையில் இருந்த சைவம், இக்காலத்தில் இயக்கமாகப் பரிணமித்தது. 'சைவ மறுமலர்ச்சி இயக்கம்' என்ற சமய அடையாளம் இயக்கமாகவும் அது தன்னை வரலாற்றில் நிலைநிறுத்தியது. இதற்கு ஆறுமுகநாவலர் என்ற புலமையாளர் தலைமையேற்றார். அவர் சமூகச் சிக்கல்களுக்குச் சமயத்தின் மூலம் தீர்வுகளை முன்வைத்தார். கிறிஸ்தவக் காலனிய யாழ்ப்பாணச் சைவத்தின் இயல்பை மிஷனரிகளிடமிருந்தும் வேதாகம நெறிக்குள் வராத பழைமைச் சைவர்களிடமிருந்தும், விடுதலையை அவாவுதலாக அவர் கட்டமைத்தார். காலனிய காலச் சமய நிலவரம் குறித்த இத்தகைய தெளிவோடு, கிறிஸ்தவத்திற்கும் சைவத்திற்கும் நிகழ்ந்த சமயக் கருத்தாடல்களை நோக்கலாம்.

**காலனிய காலச் சமயக் கருத்தாடல்: கிறிஸ்தவமும் சைவமும்**

யாழ்ப்பாணத்தில் சைவர்களும் கிறிஸ்தவர்களும் வெளியிட்ட சமயப் பிரசாரச் சிறுபுத்தகங்களும் பிரசுரங்களும் எண்ணிலடங்காதவை. இந்நூல்களில், சைவவிரோதக் கருத்துக்களைக் குறிப்பிட்டு, அவை தொடர்பான தமது நிலைப்பாட்டினைச் சைவர்களும், கிறிஸ்தவ விரோதக் கருத்துக்களைக் குறிப்பிட்டு, அவை தொடர்பான தமது நிலைப்பாட்டினைக் கிறிஸ்தவர்களும் எழுதி வெளியிடும் நெடிய போக்கொன்றைக் காலனிய காலம் முழுவதிலும் காணலாம். கிறிஸ்தவப் பரப்புரைகளும் அதற்கெதிரான சைவ எதிர்வினைகளும் நடைபெற்ற இக்காலத்தில் சமயம் தொடர்பான வரையறைகள் எதிரும்புதிருமாக முன் வைக்கப்பட்டன. குறிப்பாக, மனிதனுக்கு நல்வழிகாட்டும் சமயம் எது என்பது பற்றிய விவாதம் காலனிய காலம் முழுவதுமே நடைபெற்றுவந்தது.

### கிறிஸ்தவப் பிரசாரகர்கள் கூறும் நற்சமயம்

அமெரிக்க மிஷனரிகள் 'நற்சமயம்' எனும் பெயரிலான சிறுபுத்தகத்தை அச்சிட்டு யாழ்ப்பாணம் முழுவதும் பரப்புரை செய்தனர். இலவசமாக விநியோகித்தனர். 1820ஆம் ஆண்டு முதன்முதலாக இது அச்சிடப்பட்டது. இச்சிறுபுத்தகம் நான்குமுறை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 1842ஆம் ஆண்டு நான்காவது பதிப்பாக, 10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டது. நற்சமயம் என்பதற்கு Good Opportunity என ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நல்ல சமயத்தை நாடுவதற்கான நல்ல சமயம் (நல்ல சந்தர்ப்பம்) என்ற வெளிப்படையையும், கிறிஸ்தவ சமயமே நற்சமயம் என்ற உட்கிடையையும் அது பெற்றிருந்தது. இச்சிறுபுத்தகத்தின் நோக்கத்தினை, மிஷனரிகள் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

> "சனங்களே, சுவிஷேச போதகர்களாகிய நாங்கள், எங்கள் தேசத்தில் இருக்கும்பொழுது தமிழராகிய உங்களுடைய மார்க்கநிலையைக் கேள்விப்பட்டு, அது தவறென்று அறிந்து, உங்களுக்குச் சத்திய மார்க்கத்தை அறிவிக்கும் படி, இந்தத் தேசத்திலே வந்து, பள்ளிக்கூடங்களைவைத்து, சத்திய வேதங்களைக் கற்பிக்கிறதுமல்லாமல், அதின் சாரங்களை எடுத்துச் சிறு புத்தகங்களாக அச்சடிப்பித்துத் தந்தும் வருகிறோம். இவைகளையெல்லாம் உங்கள் ஆத்தும நன்மைக்காகச் செய்கிறதல்லாமல் வேறொன்றற்கல்ல என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்" (நற்சமயம் - 1842:1)

மேற்குறித்த பகுதியில், சைவ மார்க்கம் தவறு, கிறிஸ்தவமே சத்திய மார்க்கம், பாடசாலைகளைத் தாபித்த நோக்கம் மதப் பரப்புகையே என்பதெல்லாம் தெளிவாகிறது. சைவ வழிபாடுகளை விமர்சித்து, அவர்கள் நற்சமயம் எனக் கருதும் கிறிஸ்தவத்தை நிலைநிறுத்தும் நோக்கில், 'அன்புடன் கூறும் புத்திமதிகள்' இச்சிறு நூலில் வெளிப்படுகிறது.

"விக்கிரகங்களைப் பிரதிட்டை பண்ணிவைத்து, அவைகளை வணங்குவதே பரகதிக்கு வழியென்று சைவ சமயத்தார் சொல்லும் வார்த்தையைக் கேட்டு, அங்கே போய்ப் பொங்கல் பூசை பண்ணுவித்துத் திருநீறு சந்தனம் வாங்கி அணிந்து, திருவிழா முதலான வேடிக்கைகள் எல்லாம் பார்த்ததினாலே மனம் அலுத்து, சரீரமும் இளைத்து, பாவமும் அதிகப்பட்டதேயன்றி மனஞ் சுத்தமாகவில்லையென்பது நன்றாக விளங்கு கின்றது. இப்படியே காலம்போக மரணங்கிட்டி வருகின்றது... கிறிஸ்து மார்க்கத்தின் தன்மையைக் கேட்டறியாத வர்களுமாய் இருக்கிறவர்களே, அந்த மார்க்கத்தைப் போதிக்கிறவர்களாகிய நாங்கள் அன்புடனே சொல்லும் புத்தியைக் கேட்பீர்களாக." (நற்சமயம்., 1842:14)

மனச் சுத்தியைத் தராததும் பாவத்தை அதிகரிப்பதுமான சைவத்தை நீங்கி, சைவத்தின் விக்கிரக வழிபாட்டை விடுத்து, சடங்காசாரங்களை விடுத்து, கிறிஸ்தவத்தை நாடவேண்டும் என்ற பரிவுடனான சமயப் பரப்புகையை மேற்குறித்த பகுதி காட்டிநிற்கிறது. கிறிஸ்து ஒருவரே பாவங்களைக் கழுவும் இரட்சகர் என்று கூறி, கிறிஸ்தவத்திற்கு வாருங்கள் என இச்சிறுபுத்தகம் அறைகூவல் விடுப்பதையும் அவதானிக்க முடிகிறது.

"கிறிஸ்துநாதரே இரட்சகர். மோட்சம் பெறுவது அவராலே யல்லாமல் வேறில்லை. இந்த மெய்மையான கிறிஸ்துமார்க்கத்தி லேயன்றி, வேறொருமார்க்கத்திலே பாவ வியாதிக்குத் தகுதியான நிவர்த்தி சொல்லியிருக்கவில்லை. அதிலேதானே அந்த இரட்சகர், போதகரான நீங்கள்போய்க் கெட்டுப்போன பாவிகளையும், பாவத்தை ஒரு பாரமாக எண்ணி அதை வெறுக்கிறவர்களையுந் தேடுங்களென்றும், பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய எல்லாரும் நம்மிடத்தில் வந்தால் அவர்கள் பாரத்தை நீக்கி ஆறுதல் செய்வோமென்பதைச் சொல்லுங்களென்றும் கட்டளையிட்டி ருக்கிறார். ஆகையால் அவரிடத்திலே சேருங்கள்." (நற்சமயம்., 1842:15)

## சைவப் பிரசாரகர்கள் கூறும் நற்சமயம்

மிஷனரிகளின் கிறிஸ்தவ மதப் பிரசாரத்துக்கெதிராகச் சைவசமயிகளும் சிறுநூல்களை எழுதி வெளியிட்டனர். ஆறுமுகநாவலர் அதிக எண்ணிக்கை கொண்ட, உள்ளடக்கக் கனதி பெற்ற எழுத்துக்களை வெளியிட்டார். நாவலரது எழுத்துக்கள் 'சைவமே மெய்ச் சமயம்' என நிரூபிக்கும்வகையில் அமைந்தன. நாவலர் எழுதிய 'சைவசமயம்', 'சைவசமயி', 'சைவவிரோதம்' ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. நாவலர், 'சிவன் ஒருவரே இறப்பும் பிறப்பும் இல்லாத தலைவர்' எனச் 'சைவசமயம்' என்ற சிறுபுத்தகத்தில் குறிப்பிட்டார்.

> "பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள். பசுக்கள் எண்ணில்லாதவர்கள். பசுக்களாவார் தேவர்கள் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ள சீவர்கள். பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி. பதி ஒருவரே. அந்தப் பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்கள் எல்லாம் என்றும் அடிமைகள். சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்களையெல்லாம் ஆளுந் தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி"
> (ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு., *1996:99*)

சிவனை வழிபடுகிற உண்மை மார்க்கமே சைவம் என்றும் சிவனுக்குச் சமத்துவம் செய்வது சிவத்துரோகம் என்றும் நாவலரது பிரசுரம் வெளிப்படுத்தியது.

> "இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிற மார்க்கஞ் சைவ சமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவசமயம் ஆகாது. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றாவது கொள்வது சிவத்துரோகம்." (ஆ.பி.தி., *1996:99*)

மேற்குறித்தவை மட்டுமல்லாது, 'சைவசமயி' எனும் சிறுபுத்தகத்தில் சைவசமயிகளுக்குரிய முக்கிய இலக்கணங்களாக 12 இலக்கணங்களை நாவலர் நிரற்படுத்திக் குறிப்பிட்டார். (ஆ.பி.தி., *1996:90-92)* சைவசமயிகளை 'அஞ்ஞானிகள்' என்று மிஷனரிகள் விமர்சித்தமைக்கு மறுப்புரைக்கும் வகையில், பின்வருமாறு எழுதினார்.

> "சைவசமயிகள் அஞ்ஞானிகள் என்று கிறிஸ்தவர்கள் வழங்குகின்றார்கள். அஞ்ஞானி என்ற சொல்லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறிகிற அறிவிலாதவன். கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள் சைவ சமயிகளை அஞ்ஞானிகள் என்று வழங்கலாமென்றால், சைவசமயிகளுந் தங்கள் கருத்தின்படி, தாங்கள் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகள் என்று வழங்கலாமே" (ஆ.பி.தி.*1996:100)*

சிறுபுத்தகங்கள் மற்றும் துண்டறிக்கைகள் மூலம் இருசமயத்தாரும் நிகழ்த்திய கருத்தியல் போரில் தமிழ், சைவம் ஆகிய இரண்டிற்கும் "சைவசமயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும் சைவசமயக் கோயிலைத் தமிழ்க் கோயில் என்றும் அறிவில்லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று. ஒரு பாஷையின் பெயர்" (ஆ.பி.தி. *1996:101)* என நாவலர் தெளிவான பிரிகோடிட்டார்.

"சைவ உபதேசிகள் தங்கள் சமயக் கருத்தைப் பேசிய தமிழ் செந்தமிழாக இருந்தது. அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஐந்தில் நான்கு பங்கினருக்கு அவர்கள் என்ன பேசினார்கள் என்றே புரியவில்லை. இந்த உபதேசங்களினால் அவர்களை மிக உயர்ந்த மனிதராய் எண்ணிய கோயிலதிபதிகள், அவர்களுக்காக வாயில்களைத் திறந்து வைத்திருந்தனர்" (மேரி., மார்க்கிரட் லெஜ்ச்.*1890:36)* என்று மிஷனரிகள் கருதிய காலத்திலேதான், "ஒரு புறம் சுத்தச் செந்தமிழ் என அறியப்பட்ட உரைநடை. மறுபுறம் கொச்சைத் தமிழ். அதாவது ஏற்றமும் இறக்கமும் மேடும் பள்ளமும்.

நாவலர் இவற்றைச் சமப்படுத்தினார். பூசி மெழுகி, சுவரை மினுக்கினார்." என்று நாவலரின் பிரசங்கத் தமிழை, முத்துக்குமாரசுவாமி (மேற்கோள் - *1965:28*) குறிப்பிடுகிறார். இது நாவலரின் சிறுபுத்தகங்களுக்கும் பொருந்தும்.

நாவலரது 'சைவதூஷண பரிகாரம்' கிறிஸ்தவ மிஷனரிகளைத் திணறச் செய்தது. *1855*ஆம் ஆண்டு முக்கியமான கிறிஸ்தவ பிரசார சபைகளில் ஒன்றான வெஸ்லியன் மெதடிஸ் சபையின் அறிக்கையிலும் அத்திணறல் பிரதிபலித்தது. அவ்வறிக்கையில் சைவதூஷண பரிகாரம் பற்றி விரிவாகப் பதிவானது. அவ்வறிக்கையில் வரும் முக்கியமான பகுதி ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

> "இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவதூஷண பரிகாரம் என்ற தமிழ் நூல். அது, அசாதாரணமான இலக்கியம். கிறிஸ்து மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகச் சைவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது, முற்றிலும் புதிய தந்திரத்தைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகின்றது. அது, கிறிஸ்தவ சமயம் முறையற்றது, பயனற்றது என்று சொல்லவில்லை. சைவத்தின் சடங்குகளையும் தூக்கிப்பேசவில்லை. கிறிஸ்து ஆகமத்துக்குச் சரியான ஆகமங்களைக் காட்டி சைவத்தைவிடக் கிறிஸ்துமதத்தில் என்ன விஷேடமிருக் கிறது என்பதை அறியத் தருகின்றது" (கனகரத்தினம், இரா.வை., மேற்கோள். *2013:81*)

மிஷனரிகள் எழுதிய மேற்குறித்த பகுதி சைவச்சார்பான கண்டனங்களின் வலிமையைப் புலப்படுத்துகிறது.

## கத்தோலிக்கரின் சைவர் ஆட்சேப சமாதானம்

புரட்டஸ்தாந்துச் சமயப் பிரசாரகர்கள் சைவத்தை விமர்சித்துச் சிறுபுத்தங்கள் எழுதிய இதேகாலத்தில் கத்தோலிக்க சமயப் பிரசாரகர்களும் தமது கருத்துக்களைச் சிறுபுத்தகங்களாக்கி

வெளியிட்டனர். அவர்களது எழுத்துக்களில் புரட்டஸ்தாந்து சமயமும் சைவமும் ஒருங்கே விமர்சிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆயினும், காலனிய காலச் சமயக் கருத்தியல் முரண் குறித்த ஆய்வுகளில், கத்தோலிக்கப் பிரசாரகர்களின் சிறுபுத்தகங்களைக் கவனத்திற்கொள்ளாநிலையே நிலவுகிறது. கத்தோலிக்கப் பிரசாரகர்கள் வெளியிட்டவற்றுள், குருவுக்கும் சீடனுக்குமான உரையாடல் வடிவில் அமைந்த, 'சைவர் ஆட்சேப சமாதானம்' எனும் பெயரில் அமைந்த சிறுபுத்தகம் முக்கியமான ஒன்று. அதில், தேசாகாரப் பிரகரணம், சமயாசாரப் பிரகரணம், வேதாகமப் பிரகரணம் ஆகிய பகுதிகள் கவனிப்புக்குரியவை. இரண்டாவது பிரகரணத்தை மாத்திரம் இங்கு நோக்கலாம்.

*"சமயாசாரப் பிரகரணம்:*
*ஆட்சேபம் - கிறீஸ்து சமயம் தலயாத்திரை, விக்கிரக வணக்கம், புண்ணிய தீர்த்தம் முதலியவைகளைக் கண்டிக்கின்றது. மனுஷனுடைய இயல்புக்கும் பக்குவா பக்குவங்களுக்கும் ஏற்றவைகளாய்த் தொன்றுதொட்டு உலகெங்கணும் வழங்கி வருகின்ற இத் தீங்கற்ற வழிபாடுகளைத் துவேஷிக்கும் சமயமும் மெய்ச்சமயமாகுமா?*

*சமாதானம் - கிறீஸ்து சமயம் மெய்யான கடவுட் சம்பந்தமான தலங்களையாதல் சுரூபங்களையாதல் தீர்த்தங்களையாதல் துவேசியாது. போலிக் கிறீஸ்து சமயமாகிய புறோட்டெஸ்தாந்து மதமே இவற்றைப் பகுப்பின்றிக் கண்டிக்கின்றது." (சைவர் ஆட்சேப சமாதானம்., 1878:1)*

மேற்குறித்த பகுதி, கத்தோலிக்கப் பரப்புகையையும் புரட்டஸ்தாந்துக் கண்டிப்பையும் வெளிப்படுத்துகிறது. ஆயினும், சைவம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து ஆகிய மூன்று சமயங்களுமே, தமிழ் மற்றும் ஐரோப்பியக் கலாசாரங்களைத் தம்மளவில் உள்வாங்கி, தம்மை நிலைநிறுத்திக்கொண்டமையை வரலாறு காட்டிநிற்கிறது.

சைவர்கள் செய்வது விக்கிரக வணக்கம் என்றும் அது தவறானது என்றும் கத்தோலிக்க சமயத்தினர் குறிப்பிட்டு, தாம் செய்யும் சொரூப வணக்கமே சரியென்று வாதிட்டனர். 'விக்கிரகாராதனையும் சுரூப வணக்கமும்' எனும் துண்டுப் பிரசுரத்தில் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

> "விக்கிரகாராதனை என்னும் சொற்றொடரினால் நாங்கள் கருதுவது கடவுளல்லாத ஓர் வஸ்துவுக்குத் தேவாராதனை செலுத்தலாகிய பாபத்தையே... சுரூப வணக்கத்தையும் விக்கிரகாராதனையையும் நுட்பமாய்ப் பிரித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். மெய்யான கடவுளைச் சார்ந்ததும் கிரமமுள்ளதுமான வழிபாட்டிற்குத் துணைக் கருவியாக உருவங்களை அமைத்துக்கொள்ளுதலே சுரூப வணக்கமாம். கத்தோலிக்கர், அவதரித்த மெய்யான கடவுளேயாகிய யேசுநாத சுவாமிக்கும் அவருடைய திருத்தொண்டர்களுக்கும் குறிப்பாக உருவங்களை அமைத்து வைக்கின்றனர். அவ்வுருவங்களின்முன் கிரமமான வணக்கத்தைச் செலுத்துகின்றனர். எங்ஙனமெனில், யேசுநாதசுவாமியுடைய சுரூபங்களின் முன் அவருக்குரிய தேவ ஆராதனை செய்யப்படும். தொண்டர்களுடைய சுரூபங்களின் முன்னோ அவர்களுக்குரிய கீழான வணக்கமே செய்யப்படும். இங்ஙனம், மெய்த்தேவ வழிபாட்டோடு சேர்ந்ததாய்க் கிரமமுள்ளதாய்க் கத்தோலிக்கர் பயிலுகின்ற இம்முறைமையே சுரூபவணக்கம் எனப்படும்."
> *(விக்கிரகாராதனையும் சுரூப வணக்கமும்., 1906)*

மேற்குறித்த கருத்தானது தவறெனச் சுட்டிக்காட்டி, விக்கிரக வணக்கமும் சுரூப வணக்கமும் ஒன்றே என்பதைச் சைவப் பிரசாரகர்கள் தெளிவுறுத்தினர். அவர்களது வியாசத்தினை இந்துசாதனம் பத்திரிகை வெளியிட்டது. அவ்வியாசத்தின் ஒருபகுதி வருமாறு.

" சைவசமயிகள் கல்லையும் செம்பையும் வணங்கும் விக்கிரக வணக்கக்காரரெனக் கிறீஸ்தவர்களிகழ்ந்து பேசுவது வழக்கம். ஆனால், தாம் கடவுளை வணங்கும் போது ஏதோ ஒருவித ரூபத்தை மனதிலமைத்தே வணங்குகிறார்களென்பதை இவர்களறிந்திருந்தால் இங்ஙனம் இகழமாட்டார்கள். கிறீஸ்துவைக் கிறீஸ்தவர்கள் தியானிக்கும்போது அவர் சிலுவையிற் பாடுபட்டதை மனதில் ரூபித்தே வணங்குகிறார்கள். கல், செம்பு முதலிய லோகங்களால் விக்கிரகங்களை உண்டாக்கி அவைகள் மூலமாகக் கடவுளைத் தியானிப்பதற்கும் மனதில் ரூபித்து வணங்குவதற்குமுள்ள வித்தியாசமென்ன? இரண்டும் விக்கிரக வணக்கமேயாகும்."
(இந்துசாதனம்., 25.08.1906)

## அமெரிக்கப் பண்டிதரின் உபந்நியாசம்

கிறிஸ்தவப் பிரசாரங்களை முறியடிக்கச் சைவமறுமலர்ச்சி இயக்கத்தினர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டது மட்டுமன்றி, தமக்கு ஆதரவாக அமெரிக்காவின் நியூயோர்க்கைச் சேர்ந்த கிறிஸ்தவரும் பண்டிதருமான மைறோன் எச் பெல்ப்ஸ் (Myron H. Phelps) என்பாரை அழைத்துச் சைவசமய உண்மைகளையும் கிறிஸ்தவ மதத்தின் பொருத்தமின்மையையும் உரையாற்ற வைத்தனர். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 'Hindu Ideals And Their Preservation' எனும் தலைப்பில் 28.02.1910 அன்று ஆற்றிய உரை சிறுபுத்தகமாக வெளிவந்த அதேவேளை, 'அமெரிக்க பண்டிதர் அவர்கள் இந்து காலீஜிற் செய்த உபந்நியாசம்' என்ற தலைப்பில் 06.04.1910 வெளிவந்த இந்துசாதனம் பத்திரிகையிலும் பிரசுரமாகியிருந்தது. மிஷனரிகள் வியாபாரம் செய்யத் தகுந்தவர்களேயன்றி சமய போதனைக்கு உகந்தவர்கள் அல்லர் என்றும் இந்துக்களின் கொள்கைகள் மேலானவை என்றும் ஆகையால் அவர்களைக் கப்பலேற்றுங்கள் என்றும் அவர் கூறினார்.

"நானோர் மேலைத்தேச வாசியாயிருந்தும் என் மேலைத் தேசத்தின் பெருமைக்குக் குறைவான காரியங்களை நான் சொல்கிறேனெனின், அவைகளை நீங்களறிய வேண்டிய உரித்து உங்கட்குண்டு.... உங்கள் பிள்ளைகளைச் சம்பளம் பெறாது கற்பிக்கிறோமெனச் சொல்லி உங்கள் மனதைக் கவர்ந்து உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தம்மதத்துள் இழுத்துவிட எத்தனிக்கும் கிறிஸ்து பாதிரிமார், தங்கள் தேசத்தில் என்ன செய்து முடித்திருக்கின்றார் என வினவுங்கள். பிரபுக்காள்! மேலைத்தேசத்தவர் மார்க்க அறிவு ஊட்டத்தக்க வர்களல்லர். வியாபார காரியங்களைக் குறித்தும், றெயில்வே, மோட்டார் ரதம், ஆகாய ரதம் முதலியவற்றைக் குறித்தும் அவர்களிடம் கேட்டால், அவர்கள் நல்ல யோசனைகளைச் சொல்லுவார்கள். ஆனால், மார்க்கத்தைக் குறித்து அவர்களோடு யோசியாதேயுங்கள். இந்த விஷயத்தில் அவர்களது அறிவுரை சுத்தசூனியமே. இங்குள்ள கிறிஸ்தவ பாதிரிமாரைக் கப்பலேற்றுங்கள்.... இந்துக்களின் கொள்கைகளோ மிகமேலானவை. உலகத்திலுள்ள எச்சாகியத்தாரின் கொள்கைகளிலும் அவர்களது கொள்கைகளே சிறந்தன. அவைகள் ஆன்ம ஞானத்துக்குரிய கொள்கைகள்... நீங்கள் விழிப்படைந்தாலன்றி இந்துச் சீர்திருத்தமும் இந்துமதமும் யாழ்ப்பாணத்தில் வேரற்றுப்போமென்பதற் காசேஷபமின்று."
(இந்துசாதனம்., *06.04.1910*)

மைறோன் எச் பெல்ப்ஸ் அவர்களின் மேற்குறித்த உரையை விமர்சித்து சுவாமி ஞானப்பிரகாசர் 'இந்து சமயத்தில் ஓர் அமெரிக்க இந்து' (An American Hindu in Hinduism) 'திருவாளர் பெல்ப்ஸின் வியாசத்துக்கான ஒரு விமர்சனம்' (A critique of Mr. Phelp's letter) எனும் இரு சிறுபுத்தகங்களை எழுதினார்.

### சிறைச்சாலையுள் நுழைந்த சிறுபுத்தகங்கள்

காலனிய ஆட்சியாளர் நிறுவிய சிறைச்சாலைகளில் சிறையகப்படுத்தப்பட்ட சைவர்களுக்கு, கிறிஸ்தவப் பிரசாரம் வாரந்தோறும் மேற்கொள்ளப்பட்டது. இதற்காகச் 'சிறைச்சாலைப் போதகர்' என்ற பதவிநிலை ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதை எதிர்த்துப் பிரசாரம் செய்ய, சைவசமயிகள் சார்பில், 'சிறைச்சாலைப் பிரசாரகர்' சிலரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இருசமயத்தாரும் தமது சிறுபுத்தகங்களையும் பிரசுரங்களையும் சிறைச்சாலையுள் விநியோகித்தனர். சிறைச்சாலையுள் இடம்பெற்ற மதமாற்ற முயற்சிகள் குறித்து *09.04.1902* அன்று வெளியான இந்துசாதனம் பத்திரிகை பலமுறை விசனித்திருந்தது, உதாரணமாக, 'கொழும்பு - யாழ்ப்பாண சைவபரிபாலன சபையார்க்கிடும் அபயம்' எனும் தலைப்பில் 'சைவச் சிறைச்சாலைப் பிரசாரகர்' வை. சுப்பிரமணியபிள்ளை எழுதும் நீண்ட வியாசத்தின் முக்கியமான இரு பகுதிகளை இங்கு குறிப்பிடலாம்.

> "ஒருவன் குற்றஞ்செய்தானென்று சிறையிருப்புத் தீர்ப்புப் பெற்றது பற்றி அவன் தனது சமய சுயாதீனங்களை ஒருங்கே இழத்தல் நீதியாகாது... ஒரு குற்றத்தாற் சிறைப்பட்ட ஒரு கிறிஸ்தவனை ஞாயிற்றுக்கிழமைகளில் ஊழியஞ் செய்யுமாறு கற்பிப்பார்களா? கற்பிப்பார்களாயின் தேவ விரோதிகளாவார்களன்றோ? சமய இடர் செய்யுமென்று சத்தியஞ் செய்துதந்த ஆங்கிலராசாங்கத்துக்கு இதுவோர் பேரிழிவாகுமன்றோ." (இந்துசாதனம்., *09.04.1902)*

> "சிறைப்பட்டானொருவன் மறுமைப்பலனையடையுமாறு அவனுக்குரிய சமயகுருவை அவனுக்குப் போதிக்கும்படி அரசினர் இடங்கொடுத்திருப்பதனாலேயே, சிறைச்சாலையிலே சமயசுயாதீனம் விலக்கன்று என்பது நன்கு புலப்படுகின்றது. சிறைச்சாலையிலே எல்லோரையும் அவரவர் சமயநெறிக்குத் தக்கவாறு நடாத்துதல் அரசியல் நெறியாம்."(இந்துசாதனம்., *09.04.1902)*

சமயப்பிரசாரம் பொதுமேடைகளிலும் நடைபெற்றதை இக்காலப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கத்தானைச் சைவவித்தியாசாலையிலே சைவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே மறுபிறப்பின் உண்மைகளைப் பற்றிய சமயவாதம் நிகழ்ந்தமை பற்றிய செய்தி *09.04.1902*,ல் இந்து சாதனம் பத்திரிகையில் வெளியாகியது. இத்தகைய இடங்களிலும் சிறுபுத்தகங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

## மணச் சடங்கும் மரணச் சடங்கும்

உடுவில் பெண்கள் பாடசாலையின் தோற்றம் மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந் நோக்கங்களை சி.டி.வேலுப்பிள்ளை என்பார் தமது அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்(*1984*) என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அந் நோக்கங்களில் இரண்டாவது நோக்கம் "இத்தேசத்தில் கிறிஸ்தவக் குடும்பங்களையும் உத்தம கிறிஸ்தவ மனைவியரையும் கிறிஸ்தவத் தாய்மாரையும் உண்டாக்கவும்" (வேலுப்பிள்ளை,சி.டி. *1984:79*) என அமைகிறது.

கிறிஸ்தவத்திற்கு மாறிய ஆண்களுக்கு மணமகளை வழங்குவதற்கு அக்காலச் சைவச் சமூகம் உடன்படவில்லை. இதனால் அவர்கள் மறுபடியும் சைவத்திற்கு வரவேண்டிய தேவை உண்டாயிற்று. வராதவர்களும் சைவப் பெண்களைத் திருமணம் முடிக்கும்நிலை ஏற்பட்டது. சைவத்தை மறுபடி ஏற்றவர்கள் சைவம்சார் திருமணச் சடங்குகளையும் ஏற்கவேண்டியதாயிற்று. இச்சூழலில், மிஷனரிகள் 'விவாக சம்பந்தம்' எனும் சிறு புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டனர். இப்புத்தகம் *1844*ஆம் ஆண்டு இரண்டாவது பதிப்பாக மூவாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இப்புத்தகத்தில் "மெய்க் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லா தவர்களுடனே விவாக சம்பந்தம் பண்ணிக்கொள்வதினாற் பெரிய தீமை உண்டாகும்" (விவாக சம்பந்தம்., *1844:1*) எனக் குறிப்பிடப்படுகிறது.

> “ அக்கிரமக்காரராயும், இருளுள்ளவர்களாயும், அவிசுவாசிக ளாயும், பசாசுக்கு இருப்பிடமாயும் இருக்கிற விக்கிரக பக்திக்காரருடனே, கிறிஸ்துவின் புண்ணிய பலத்தைக் கொண்டு நீதிமான்களாயும் ஞான வெளிச்சம் உள்ளவர்க ளாயும் பராபரனுக்கு ஆலயமாயுமிருக்கிற நீங்கள், அவர்களோடே ஐக்கியப்பட்டிருக்கிறது சரியல்லவென்று அறிந்து, மோட்சஞ் சேருகிற வழியிலே நடக்கிற சகோதரருடனே கூடி ஒருமித்து நடக்கப் பார்ப்பீர்களாக” (விவாக சம்பந்தம். 1844:9)

திருமணத்திற்காக மறுபடியும் சைவத்துக்கு மாறுவோரைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை மேற்படி கூற்றுப் புலப்படுத்துகிறது. கிறிஸ்தவத்திலிருந்து சைவத்திற்கு மதம்மாறுவதற்கு, யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் திருமணத்தை நிர்ணயிக்கும் சீதனமும் முக்கியமானதாய் அமைந்தது. இதனால் மிஷனரிகள், ‘நற்கொடை - சீதனத்தினாலாகுந் தீமைகள்” (1869) என்ற ஒரு சிறு புத்தகத்தை யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு விநியோகித்தனர்.

> “ஒரு பெண்பிள்ளைக்கு ஒரு புருஷனைச் சம்பாதிக்கும்படி பெற்றார் சீவிய காலத்தில் அவர்கள் ஆஸ்தி முதலியவைகளைப் பங்கிட்டுத் தருவதே சீதனம். இது யாழ்ப்பாணத்தாரின் பொதுப்பழக்கம். இது மகா பெரிய தீமை. இந்தத் தீமை கிறிஸ்தவ சபையையுங்கெடுக்க ஏதுவாயிருக்கிறது” (நற்கொடை - சீதனத்தினாலாகுந் தீமைகள்., 1869:1)

மேற்படி கூற்றிலிருந்து, கிறிஸ்தவ மிஷனரிச் சபையினைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு, யாழ்ப்பாணச் சீதனமுறை இருந்ததை அறியமுடிகிறது. 23.10.1905 அன்று வெளியான இந்து சாதனத்தில் ‘ஆத்மசம்ரசஷிணீ’ என்னும் பெயரில் ஒருவர் எழுதிய ‘இந்து சமயிகளும் கிறிஸ்தவப் பாடசாலைகளும்’ என்னும் கட்டுரையில் மிஷனரிகளின் மேற்குறித்த நிலைப்பாடு விமர்சிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

“பாதிரிமார்... இந்து சமயப் பெண்களையும் அவ் விதமாய்க் கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்த்துவிட யோசித்து பெண் பாடசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரங் கிறிஸ்தவ மதத்தைப் போதித்திருந்தால் அவன் இந்து சமயப் பற்றுடைய பெண்ணைக் கலியாணம் செய்யும்போது அவளாலிவனி டத்துள்ள பற்று ஒழிந்துவிடுமென்று யோசித்தார்கள் போலும்” (இந்துசாதனம்., 23.10. 1905)

காலனிய யாழ்ப்பாணத்தில், அபரக்கிரியையின் சமூக முக்கியத்துவத்தைச் சிறிது நோக்குவது பயனுடையது. சமயமாற்றம் நிறைந்த யாழ்ப்பாணத்தில் சமயம் மாறியவரது இறப்பின் பின்னான கிரியைகள் பெரும் விவாதங்களை ஏற்படுத்தின. கிறிஸ்தவத்துக்கு மாறிய ஒருவர் இறந்த பின்னர், அவரது சிரார்த்தக் கிரியைகளை எந்தச் சமயமுறையின் பிரகாரம் நிகழ்த்துவது? சைவ முறையிலா? கிறிஸ்தவ முறையிலா? சிரார்த்தக் கடனை மேற்கொள்பவர் யார்? இறந்தவரின் பிள்ளைகள் சைவராயின் அதனைச் சைவமுறையில் மேற்கொள்வது சரியானதா? இவ்வகையிலான வினாக்கள் எழுப்பப்பட்டு விவாதங்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய ‘சிரார்த்த தீபிகை’, ‘சைவ சிரார்த்த விதி’ ஆகிய நூல்களும் நீர்வேலிச் சங்கரபண்டிதர் எழுதிய ‘சபிண்டீகரணச் சிரார்த்த விதி’ என்ற நூலும் இத்தகையதொரு விவாதச்சூழலில் பெரும் செல்வாக்குப்பெற்றன. இன்னும் இத்தகைய நூல்களின் எழுச்சியை மதமாற்றச் சூழலில் சைவத்தமிழ்ப் புலமையாளர்களின் எதிர்வினையாகவும் கொள்ளல் தகும். அபரக் கிரியையைத் தீர்மானிப்பதில் கிறிஸ்தவ எதிர்ப்பு மனோபாவம் முதன்மை வகித்தது. இதற்கு, நாவலரது ‘சைவவிரோதம்’ எனும் சிறு புத்தகத்திலிருந்து ஒரு பகுதியைச் சான்று காட்டலாம்.

"தீக்ஷை பெற்றபின் மரண பரியந்தம் அனுட்டிக்கப்பட்ட சமயாசாரத்தில் விளைந்த குறைவுபாட்டுக்குச் செய்யப்படும் பிராயச்சித்தமன்றோ அந்தியேட்டி! சமய தீக்ஷைதானும் பெறாது, சமயாசாரம் ஒரு சற்றும் சாராது, விபூதி சிறிதுமிடாது, பாதிரிமாரைப் பிரீதிப்படுத்திக் கொண்டு, கிறிஸ்தவர்கள் பந்தியிலே கலந்து போசனஞ் செய்துகொண்டு திரியும் மனிதப் பதர்களுக்குத் தருப்பையிலும் அந்தியேட்டி செய்யத்தகாதே! இப்படியாகவும், வேதாரணியத்துச் சைவகுருமார்களும் வரணி கரணவாயிற் சைவக் குருமார்களும் இவர்களுக்குப் பிரேதத்தில் அந்தியேட்டி செய்யத்தலைப்பட்டுக் கொண்டார்களே! இவையெல்லாங் கண்டித்தவர் யாவர்!" (ஆ.பி.தி. 1996:23)

கிறிஸ்தவ மத மாற்றச் சூழலில் அந்தியேட்டி, சபிண்டீகரண விதிகளின் பிரயோக நிலவரத்தை அறிவதற்கு நாவலரது பல பதிவுகள் உதவுகின்றன. அபரக்கிரியைகள் தொடர்பாகச் சைவமறுமலர்ச்சி இயக்கத்தாரின் அதீத கரிசனை எதற்கானது என்ற வினா இங்கு முக்கியமானது. இதற்குரிய விடைகளாக மூன்று அம்சங்களைக் குறிப்பிட முடியும்.

முதலாவது, கிறிஸ்தவத்துக்கு மாறியோரின் 'இருநிலைச் சமய வாழ்வு' இது முக்கியமானதொரு அம்சம். அதாவது, சைவராயிருந்து கிறிஸ்தவராக மாறியவரின் 'இருநிலைச் சமய வாழ்வு' அல்லது 'வெளியில் கிறிஸ்தவம் உள்ளே சைவம்' என்னும் நிலைப்பாடு. இந்தநிலை இறுதிக் கிரியையிலும் இரட்டைநிலையை உருவாக்கியது. அதவாவது, இறந்த ஒருவரின் உடல் இருமதக் கிரியைகளுக்கும் (சைவம் - சைவச்சிரார்த்தக் கிரியை - ஆன்ம ஈடேற்றத்திற்கானது, கிறிஸ்தவம் - இறந்தவரின் வாழ்வுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் திருப்பலி) இடங்கொடுக்கும் நிலையை உருவாக்கியது.

இரண்டாவது, 'சைவ உடல்' பற்றிய கரிசனை. சைவ உடலைக் கட்டமைப்பதற்காக நாவலர் சரியை, கிரியை ஆகியவற்றை அதிகம் கவனப்படுத்தினார். அவரது செயற்பாடுகளும் எழுத்துகளும் இதனை நிரூபிக்க வல்லவை. காலனியகாலச் சமயவெளியில் 'சைவ உடல்' என்பதை அவர் அதிகம் முதன்மைப்படுத்தினார். அதற்காக, தீட்சை, திருநீறு முதலாய சிவசின்னங்களைக்கொண்டு 'சைவ உடல்' என்பதைக் கருத்தாக்கமாக உருவாக்கினார். சமய அடையாள இயக்கத்தில் உடல்சார் அரசியலின் முக்கியத்துவம் இதனூடு புலனாகின்றது.

மூன்றாவது, சமயம் மாறியவர்களுக்கான தண்டனை. சைவத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறியவர்களுக்கு அபரக்கிரியை செய்யக்கூடாது என்ற நிலைப்பாடு, சமயம் மாறியவர்களுக்கான தண்டனையாகவே பின்பற்றப்பட்டது. அதாவது, பிறப்பது சைவனாக எனில் இறப்பது எவ்வாறு கிறிஸ்தவனாக அமையும் என்பதையொட்டிய நிலைப்பாடாகும். கிறிஸ்தவத்திற்கு மாறியவர்கள் இறந்த பின்னர், அவர்களின் உடல்களுக்குக் கிரியை செய்ய மறுப்பதும், அவ்வுடல்களுக்கு இறந்தவரின் சைவ உறவினர்கள் கிரியை செய்விப்பதைக் கண்டிப்பதும், கிறிஸ்தவராக இறந்தவரது சைவ உறவினரின் வேண்டுதலின்பேரில் கிரியை நிகழ்த்திய குருக்களைக் கண்டிப்பதும் இதன்பாற்பட்டவை. இதன்மூலம், சமயம்மாற எத்தனிப்போரைத் தடுப்பதும், மாறியோருக்குச் சிரார்த்தம் செய்யாது தடுத்துத் தண்டனை வழங்குவதன்மூலம் சமயம்மாற இருப்போரை எச்சரிப்பதும் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் உத்திகளாக இருந்திருக்கலாம்.

இம்மூன்று அம்சங்கள் காரணமாகவும் அபரக்கிரியை பற்றிய அதீத கரிசனை நிலவியது. அபரக் கிரியையின் சமூக நிலவரத்தைக் காட்டும் வகையிலும் சிறுபுத்தகங்கள் எழுந்தன. சிவசம்புப் புலவரின் 'சபிண்டி நாடக சங்காரம்' என்ற சிறுபுத்தகம் அவ்வகையில் முக்கியமானது. 'சபிண்டி நாடக சங்காரம்' என்று அறியப்பட்ட சிவசம்புப் புலவரின் கண்டனச் சிறுபுத்தகம் 'வல்வைச்

சிவன் கோயிற் சபிண்டி நாடக சங்காரம்' என்ற தலைப்பில் 1900ஆம் ஆண்டு வெளியாகியது. ஆறுமுகநாவலர் சைவதூஷண பரிகாரத்தை 'சைவப்பிரகாச சமாசீயர்' எனும் பெயரில் எழுதியதுபோல, புலவர் சபிண்டி நாடக சங்காரத்தை, 'வடமராட்சி சுத்த சித்தாந்த சைவர் தோழர்' என்ற பெயரில் எழுதினார்.

புலவரது சிறுபுத்தகம் அவரது காலச் சமூகத்தில் நடைபெற்ற சபிண்டிக் கிரியை ஒன்றைக் கண்டிக்கிறது. 'உண்மைக்குப் புறம்பானது' என்ற அர்த்தத்தில் அதனை 'நாடகம்' எனக்குறிக்கிறார், புலவர். அதனைப் புலவர் தமது எழுத்து மூலம் 'சங்காரம்' செய்கிறார். அதுவே சபிண்டி நாடக சங்காரம். யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த சைவரான இராமுப்பிள்ளை கிறிஸ்தவத்திற்கு மாறி நதானியேல் றசல் எனும் பெயரோடு கிறிஸ்தவராய் விளங்கினார். சைவராக இருந்து கிறிஸ்தவத்துக்கு மாறிய றசல் இறந்தார். இவருக்கு மருமகன் நொத்தாரிசு வ.சின்னத்தம்பிப்பிள்ளை. றசல் இறந்தபோது அவரது மருமகனாகிய சின்னத்தம்பிப்பிள்ளையே அந்தியேட்டி, சபிண்டி ஆகியவற்றைச் செய்து முடித்தார். சபிண்டிக்கிரியை செய்த குருக்கள், வல்வெட்டித்துறைச் சிவன் கோயில் அர்ச்சகர்களுள் ஒருவரான சிவஸ்ரீ சண்முகக் குருக்கள்.

சபிண்டிக் கிரியை செய்த சண்முகக்குருக்கள் தொடர்பாகப் பல சர்ச்சைகள் எழுந்தன. வல்வைச் சைவாபிமானிகள் கொதித்தெழுந்தனர். சண்முகக் குருக்களுக்கு எதிராக கோயிலிலும் ஊரின் பிற இடங்களிலும் கூட்டங்கள் நடைபெற்றன. குருக்கள் எனும் தகுதியை அவர் இழந்துவிட்டார் என்ற அளவில் சர்ச்சைகள் நீண்டு சென்றன. சண்முகக் குருக்கள் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரைத் தனக்குத் துணையாக்கினார். வல்வைப் பிரமுகர்களும் பிரபுக்களும் சைவமக்களும் சிவசம்புப் புலவரைத் தமக்குத் துணையாக்கினர். இச்சர்ச்சை தொடர்பான பிரசுரங்கள் இருசாராராலும் வெளியிடப்பட்டன. பத்திரிகைகள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளைப் பிரசுரித்தன. குருக்கள் சார்பாகச் 'சிவப்படை' என்னும் சிறு கண்டனப் பிரசுரம்

சிவப்பிரகாச பண்டிதரால் எழுதி வெளியிடப்பட்டது. அதற்கு மறுப்பாகவே 'சபிண்டி நாடக சங்காரம்' புலவரால் எழுதப்பட்டது. புலவர் இக்கண்டன நூலை எழுதி வெளியிடுவதற்கு முன்னர், வல்வெட்டித்துறையில் ஒரு கூட்டம் சிவப்பிரகாச பண்டிதர் தலைமையில் நடைபெற்றது.

> "றசல் கிறீஸ்தவரல்லவா எனப் பண்டிதர் சாதிக்க முற்பட்டார். 'சண்முகக் குருக்கள் குற்றமுடையாரோ? அல்லரோ? என்று முடிபு சொல்லுகிறீர்கள்?' எனச் சந்தேகம் நிகழ வினாவினர் கோவிலதிபதிகள். இராமப்பிள்ளை கிறீஸ்தவரல்லர் என நிச்சயிக்கிறோம். அவர் கிறிஸ்தவராயினும் ஆங்கிலப் பேர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை பேரிற் சபிண்டியேற்ற குருக்கள் குற்றமுற்றவர் ஆவது எப்படியோ? அயோக்கியரிடத்துத் தானமேற்றதால் வரும் குற்றமும் பிராயச்சித்த மந்திர செபற்றாற்றானே நீங்கத்தக்கது என்று வாதித்தார் சிவப்பிரகாச பண்டிதர் இதற்குப் பிரமாணங்களும் காட்டினார்." (தேவகி, நீலகண்டன். 1972:32)

முன்னர் கிறிஸ்தவர் அல்லர் என்று நிச்சயித்து, பின் அவர் கிறிஸ்தவரேயானாலும் எனவைத்து, ஆங்கிலப் பெயர் மாத்திரம் பூண்ட இராமப்பிள்ளை என ஒன்றோடொன்று முரண்பாடாகக் கூறி, தாம் எடுத்துக்கொண்ட விடயத்தை நிலைநிறுத்த முடியாது போனார், பண்டிதர்.

> " புலவர் சார்பினராகிய கோவிலதிபதிகளும் வல்வைப் பிரமுகர்களும் குறித்த இராமப்பிள்ளை கிறிஸ்தவ மதத்திற் பிரவேசித்ததையும், நதானியல் றசலாக மாறியதையும் கிறிஸ்தவராக வாழ்ந்து, கிறிஸ்தவராக மரித்தவர் என்பதையெல்லாம் தக்க ஆதாரங்களுடன் நிரூபித்து நிலைநாட்டினர். எதிர்ப்பகுதி குதர்க்கத்தில் இறங்கவே கூட்டம் குழப்பமுற்றது. சண்முகக் குருக்கள் தருக்கொழியாதவராகவேயிருந்தார்." (தேவகி, நீலகண்டன். 1972:33)

கோயிலிற் கூடிய கூட்டம் குழம்பியமையும், எதிர்த்தரப்பிடம் பதிலின்மையும், தருக்க முறையற்ற விவாதமும் சிவசம்புப் புலவரைச் சபிண்டி நாடக சங்காரம் எழுதத் தூண்டின. இதுவே இந்தச் சிறுபுத்தகம் தோன்றிய பின்னணி.

இதன் அமைப்பு வழக்கறிஞரின் எழுத்துப் பத்திர அமைப்பை ஒத்தது. இக்காலத்தில் வழக்கறிஞரின் எழுத்துப் பத்திர அமைப்பில் வெளிவந்த சிறுபுத்தகம் புலவரது நூல் ஒன்றே எனத் துணிந்து கூறலாம். நூலின் புதுமையான அமைப்பு ஆறு பகுதிகளைக் கொண்டது. அவற்றைச் சுருக்கமாக நோக்கலாம்.

1. நதானியேல் றசல் என்பவரைக் கிறிஸ்தவர் எனக்கருதி நற்சான்றுப் பத்திரங்களை எழுதிய பத்து நபர்களின் விபரம் - பத்து நபர்களில் சேட்சுமிஷனில் ஒருவரும் அமரிக்க மிஷனில் ஒன்பது பேரும் அடங்குகின்றனர். அவர்களில் போதகர் மூவர், உபாத்தியாயர் மூவர், மிஷனரி ஒருவர், உபதேசியார் ஒருவர். இருவரது தொழில்நிலை குறிக்கப்படாததால் அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய சைவர்களாக இருக்கலாம். குறித்த பத்து நபர்களும் நல்லூர், காரைதீவு, உடுவில், உடுப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் எழுவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்கள்.

2. பாதிரிமார்கள் அனைவரும் நதானியேல் றசல் குறித்து எழுதிய நீண்ட அபிப்பிராயங்களின் சாராம்சம் - மேற்குறித்த பத்து நபர்களிடமிருந்தும் புலவர் விரிவான எழுத்துமூல ஆவணங்களைப் பெற்றிருக்கிறார் என்பது, "இவர்கள் நதானியேல் றசல் என்பவரைக் குறித்து நமக்கெழுதித்தந்த சாட்சிப் பத்திரங்களின் விரிவைச் சுருக்கிய சாரம்" (1900:1) எனும் வாசகத்தால் தெளிவாகிறது.

3. கிறிஸ்தவரான றசலைச் சுத்த சைவரெனக் கருதி வெளியிட்ட கருத்துக்களும் மறுப்பும் கொண்ட பகுதி - இது ஐந்து

பிரிவுகளை உடையது. குறித்த விடயம் தொடர்பாக வே.கனகசபாபதி ஐயர், சு.சரவணமுத்துப்பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர், செ.இராமலிங்கக் குருக்கள், ச.சுப்பிரமணியக் குருக்கள் ஆகிய ஐவரது கருத்துக்களும் ஆட்சேபங்களும் ஐந்து பிரிவுகளில் அமைந்துள்ளன. இது புலவருக்குச் சார்பான சைவத்தமிழ்ப் புலமையாளர்களின் கருத்துக்கள் அடங்கிய பகுதியாக அமைகிறது. "இவ்வித உறுதியைக் கொண்ட கிறிஸ்தவரைச் சுத்த சைவரென்று நடித்த நாடகமும் மறுப்பும்" என்று தலைப்பில் இப்பகுதி அமைந்துள்ளது.

4. புலவரது தீர்ப்பு - இப் பகுதி 'தீர்ப்பு' எனும் தலைப்பிலேயே அமைந்துள்ளது. பாதிரிமார் றசல் பற்றிக் கூறியவற்றையும் சைவப்புலமையாளர்கள் றசலின் விவகாரம் குறித்துக் கூறியவற்றையும் ஆராய்ந்து புலவர் தமது தீர்ப்புக் கூறும் பகுதியாக இது அமைந்துள்ளது.

5. 'சிவப்படையின் மறைந்துநின்ற சில கட்டிவசனச் செல்வரே' என்ற பகுதி - இது சிவப்பிரகாச பண்டிதரையும் அவரைச் சார்ந்தோரையும் விமர்சனம் செய்து கண்டிப்பதாயும், பண்டிதரதும் குருக்களதும் செயல் பிழையென்று வலியுறுத்து வதாயும், 'சிவப்படை' எனும் பெயரிலான கண்டனப் பிரசுரத்தில் தருக்கம் அற்ற தன்மையைக் கேள்விக்குட்படுத்துவதாயும் அமைந்துள்ளது.

6. முடிவு - சிவப்படையின் கையொப்பம் பற்றிய விமர்சனமும், இப் பிரச்சினை தொடர்பாக மேலும் தமது பிரசுரங்கள் வெளிவரும் என்பது தொடர்பான 'பாயிரம் ஒரு வகையான் முடிந்தது. இனி பாயிரவிருத்தியும் ஒழிந்தவும் 200 செய்யுளமைந்த குலமுறைப் புராணமும் வரும்' எச்சரிக்கையும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

இவைதொடர்பான பல செய்திகள் இவ் உரையின் விரிவஞ்சித் தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறு காரசாரமான சமயக் கருத்தாடல் நடைபெற்ற சூழலில்தான், சைவ மறுமலர்ச்சியினரின் காலனிய அதிகார ஓம்புதலும் சமனாகப் பயணித்து வந்தது.

## சைவச் சுதேசிகளின் காலனிய 'ஓம்புதல்

ஆங்கிலேய 'ஏகாதிபத்திய நாள்' யாழ்ப்பாணச் சைவப் பாடசாலைகளில் பெருமகிழ்வோடு கொண்டாடப்பட்டது. சைவமறுமலர்ச்சி இயக்கத்தின் பிரசார ஊடகமாக உருவாகி, சைவத்தை நிலைநாட்ட இந்துசாதனம் பத்திரிகையை வெளியிட்ட, சைவத்தமிழ்ப் பாடசாலை ஒன்றை உருவாக்க வேண்டும் எனும் நாவலரின் நோக்கத்திற்கமையச் செயற்பட்ட, சைவபரிபாலன சபையால் 'இந்து உயர் பாடசாலை' என்ற பெயரில் பொறுப்பேற்று நடாத்தப்பெற்ற, இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்று அறியப்படும் சைவத்தமிழ்ப் பாடசாலையில் 'ஏகாதிபத்தி நாள்' கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவப் பரப்புகைக்கு எதிர்நிலையிலிருந்த, அக்கல்லூரியை மேலாண்மை செய்த சைவபரிபாலன சபையின் இந்துசாதனம் பத்திரிகை, அக்கொண்டாட்டச் செய்தியைப் பெருமகிழ்வோடு பிரசுரித்தது. 'ஏகாதிபத்திய நாள்' எனும் தலைப்பில் அமையும் அச்செய்தியை இங்கு குறிப்பிடலாம்.

> "மகிமை தங்கிய எங்கள் எட்வேட் மகாராஜா அவர்களின் நற்றாபராகிய இராணி விக்தோறியாப் பெருமாட்டியையும், அவரது காலத்தில் ஆங்கில அரசானது பருத்தோர் பெரிய இராச்சியமானதையும் நினைவு கூர்தற்கும் ஆங்கிலவரசின் கீழுள்ள பிரசைகளாகிய நம்முள் இராசவிசுவாசமானது ஓங்கி வளர்தற்பொருட்டுமாகக் கொண்டாடப்பட்டு வரும் ஏகாதிபத்தியநாள் ஷெ இராணியாரவர்களின் ஜெனன நாளாகும். சென்ற உச (24) யாழ்ப்பாணத்தில் உள்ள சகல கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் மிக்க விமரிசையோடும் கொண்டாடப்பட்டது. நமது ஏசன்றர் மெஸ் பிறைஸ் அவர்கள் அன்று காலை பட்டினப்

பகுதிலுள்ள பல கல்லூரிகளைத் தரிசித்து, மாணவர்க்கு ஏகாதிபத்திய நாட்கொண்டாட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் இராச பக்தி விசுவாசத்தைப்பற்றியும் உபந்நியாசித்தனர். நமது யாழ்ப்பாணம் இந்துகாலீஜில் இது வெகு கொண்டாட்டமாக வழமைபோல் நடைபெற்றது. ஏசன்றவர்கள், உதவி ஏசன்றர் மெஸ், ஹியூஸ் அவர்களுடன் ச (4) மணியளவில் காலீஜைத் தரிசித்த போது, பிரதம ஆசிரியர் ஸ்ரீ நெ.செல்வத்துரைப்பிள்ளை அவர்கள், அவர்களை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மேன்மண்டபத்திற் கழைத்துச் சென்று பூமாலையிட்டாசனத்தமரச் செய்தனர். இவர்களு டன், தமிழ்ப்பிரதிநிதி கௌரவ ஸ்ரீ அ. கனகசபையவர்களும், பிறக்கிராசியார் ஸ்ரீ. வி. காசிப்பிள்ளையவர்களும், கச்சேரி முதலியார் ஸ்ரீ. ம. இராமலிங்கமவர்களும், யாழ்ப்பாணம் மணியகாரன் ஸ்ரீ. சின்னையா அவர்களும் சமுகமளித்தி ருந்தனர். ஏசன்றரவர்கள் பிள்ளைகள் காட்டிய இராச பக்தி விசுவாசத்தைக் குறித்து வியந்து பேசியபின், பிரதம ஆசிரியர் ஸ்ரீ. செல்லத்துரையவர்கள், மெஸ்.பிறைஸ் அவர்களுக்கு ஸ்துதி கூறினர். பின் மாணவர்களும் உபாத்தியாயர்களும் பலவித பலகார வகைகளும் பழவகைகளும் அருந்திக் கொண்டாடினர்."

(இதுசாதனம். *12.05.1909*)

ஏகாதிபத்திய ஆட்சியாளர் 'எட்வேட் மகாராஜா' அவர்கள் மரணித்தபோது யாழ்ப்பாணத்தில் பெரும் சோகம் நிலவியதையும் கடைகள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டதையும் முக்கியமாக ஆலயங்களில் துக்கமணி ஒலிக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இதுதொடர்பாக இந்துசாதனம் பத்திரிகையில் வெளியாகிய இன்னொரு செய்தியையும் இங்கு குறிப்பிடலாம்.

"மகத்துவந் தங்கிய எம். எட்வேட் மகாராஜா அவர்களின் தேகவியோகம் - ஆங்கில அரசின் செங்கோலோச்சித் தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையுங் காத்து

அரசாண்டுவந்த எங்களரசரேறாகும் எம். எட்வேட் மகாராசா அவர்கள் மின்னாது முழங்காது இடி விழுந்தவாறாய் காத்திராப்பிரகாரம் சென்ற சா (6) இரவு கக (11) மணியளவில் தேகவியோகமாகிவிட்டனர். இவரது மாதாவாகும் இராணிவிக்தோறியாப் பெருமாட்டியார் இறந்தபோது எவ்வளவு துக்கமிங்கு உண்டாயிற்றோ அவ்வளவுதுக்க மிங்கு இப்பொழுது உண்டாயிற்று. இத்துக்க அறிகுறியாக, சனிக்கிழமை க0 (10) மணியளவில் இச்செய்தி இங்கெட்டியவுடன், சகல ஆபிசுகளும் பூட்டப்பட்டன. கறுப்புத்துவசங்கள் பலவிடங்களிலும் ஆரோகணிக்கப்பட்டன. ஆலயங்கள் துக்க ஒலி ஒலித்தன. சனி ஞாயிற்றுக்கிழமைகள் பள்ளிக்கூட நாட்களல்லாமையால் திங்கட்கிழமை பள்ளிக்கூடங்கள் யாவும் பூட்டப்பட்டன." (இந்து சாதனம்., 11.05.1910)

## முடிவுரை

இதுவரை நோக்கிய காலனியகால உரையாடல்களின் வழிநின்று சிந்தித்தால், காலனிய காலத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிராகச் 'சைவமே மெய்ச் சமயம்' என யாழ்ப்பாணச் சைவச் சுதேசிகள் சிறுபுத்தகங்கள், பிரசுரங்கள், நூல்கள் மற்றும் பத்திரிகைகளின்வழி நிகழ்த்திய சமயக் காப்புப் போர், காலனியச் சமய வெளியில் பெரும் விஸ்வரூபமாக, வரலாற்றின் நெடிய பாதையில் தெரிவதற்குப் பின்னால், காலனிய ஓம்புதலும் நிகழ்ந்தமை என்பது ஆச்சரியமான ஒன்றுதான். காலனியச் சமயமான கிறிஸ்தவத்தையும் அதன் செயற்பாடுகளையும் வெறுப்பது ஒருபுறமும், காலனிய ஆட்சியைப் போற்றுவது மறுபுறமும் என நிலவிய இவ்விருபோக்குகளும், காலனிய காலம் முழுவதும் சமாந்தரமாகவே பயணித்து வந்துள்ளதைத் தெளிவாக அறியமுடியும். காலனிய ஆட்சியின் சலுகைகளைப் பெற்று யாழ்ப்பாணத்தை உய்விப்பதற்கு இந்த இரட்டைத் தன்மை யாழ்ப்பாணச் சைவர்களுக்கு அவசியமாக இருந்தது. இன்னும்,

காலனியகால யாழ்ப்பாணச் சைவத்தமிழ் உயர்குழாத்தினரின் காலனிய எதிர்ப்பு என்பது, அவர்கள் தமது செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த காலனிய ஆட்சியாளருடன் சமரசம் செய்வதும், உடன்படுவதும், விட்டுக்கொடுப்பதும், வளைந்து போவதும், தாம்சார்ந்த வர்க்க சமூக நலன்களில் ஊறித்திளைப்பது மாகவே அமைந்திருந்தது. நிறைவாகச் சொல்வதானால், யாழ்ப்பாணச் சைவச் சுதேசிகளின் காலனிய எதிர்ப்பு என்பது சமய நலனும் காலனியச் சலுகை நலனும் ஒன்றிக்கலந்த முரணும் நெகிழ்வும் மிக்கக் கூடாரமாக அமைந்தது என்பதே பொருத்த மானது.

## உசாத்துணை நூல்கள்

Bhabha, Homi k., **The Location of Culture**, London and New York: Routledge, 2013.

Chandasiri, Ven. Olaganwatte., **Nineteenth Century Poetical Works and Social Institutions of Sri Lanka,** Colombo: Vijitha Yapa Publications, 2018.

Ebeling, Sascha., **Colonizing the Realm of Words,** New Delhi: Dev Publication and Distributers, 2013.

Jayasekera, P.V.J., **Confrontations with Colonialism, Resistance, Revivalism and Reform Under British Rule in Sri Lanka 1796 - 1920**, Colombo: Vijitha Yapa Publications, 2017.

Kafka., **Toward a Minor Literature**, London: University of Minnesota Press, 2016.

Mary & Margaret W. Leitch, **Seven Years in Ceylon – Stories of Mission Life,** New Delhi: Asian Educational Services, 1999.

Panikkar, K.N., **Colonialism, Culture and Resistance,** India: Oxford university press, 2009.

Pramod, k. Nayar., **post colonial Literature - An Introduction,** India: Pearson India Education Services, 2013.

Said,W. Edward., **Orientalism - Western Conceptions of the Orient,** India: Penguin Random House, 2001.

Shulman, David., **Tamil A Biography**, London, England: The Belknap Press of Harvard University press, 2016.

Winslow, Miron (Edit.) **Memoir of Mrs. Harriet L. Winslow**, New Delhi: Asian Educational Services, 2003.

*அண்ணாமலை, இ., தமிழில் புத்தகக் கலாசாரம் - க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள், சென்னை: க்ரியா, 2021.*

அரசு, வீ., தமிழ்ச் செந்நெறிப் பிரதிகளைச் சைவமரபு எதிர்கொண்ட கதை, சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 2017.

அருமைநாயகம், எஸ்., வரலாற்றுச் சிந்தனைத் தடம், கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2014.

ஆறுமுகநாவலர்., சைவ தூஷண பரிகாரம், யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை, 1852.

இரகுபரன், க., (ப.ஆ.) ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1996.

இராசநாயகம், செ., யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆங்கிலேயர் காலம், கொழும்பு: விவேகானந்தா புத்தக நிலையம், 1934.

இராமமூர்த்தி, எல்., மொழியும் அதிகாரமும், தஞ்சாவூர்: அகரம், 2005.

ஈசுவரப்பிள்ளை, தா., பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 2006.

எட்வர்ட் கிண்டர்ஸ்ஸி, நதானியல்., அதிகாரமும் தமிழ்ப் புலமையும் (மொ.பெ: ந. கோவிந்தராஜன்) சென்னை: க்ரியா, 2016.

ஏலியா, கனெட்டி., அதிகாரத்தின் மூலக்கூறுகள் (மொ.பெ: ரவிக்குமார்) சென்னை: மணற்கேணி பதிப்பகம், 2016.

கணேசலிங்கம், ப., (தொ.ஆ.) இலங்கையில் இந்து சமயம் (கி.பி 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில்), கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2017.

கதிரைவேற்பிள்ளை, நா., சுப்பிரமணிய பராக்கிரமம், கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 1960.

கப்ரால், அமில்கர்., விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டின் பாத்திரம் (மொ.பெ: எஸ். பாலச்சந்திரன்), சென்னை: பாரதி புத்தகாலயம், 2012.

கலையரசி, அ., **தன்னிலைக் கட்டமைப்பும் தகர்ப்பும்**, மதுரை: கருத்துப் பட்டறை, 2013.

கனகரத்தினம், இரா.வை., **நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும்**, கொழும்பு: ஐ. இரத்தினம் ஞாபகார்த்த வெளியீடு, 2007.

குலரத்தினம், க.சி., **இந்து சமயத்தின் சீர்திருத்த இயக்கங்கள்**, கொழும்பு - சென்னை: குமரன் புத்தகஇல்லம், 2010.

கோவிந்தராஜன், ந., **மொழியாகிய தமிழ் - காலனியம் நிகழ்த்திய உரையாடல்கள்**, சென்னை: க்ரியா, 2021.

கைலாசபதி, க., **ஈழத்து இலக்கிய முன்னோடிகள்**, சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ், 2001.

சண்முகதாஸ், அ., **கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி**, யாழ் பல்கலைக்கழகம்: கிறிஸ்தவ நாகரிகத்துறை, 1986.

சந்திரகாந்தன், ஏ.ஜே.வி.,(தொ.ஆ) **தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்**, யாழ். பல்கலைக்கழகம்: கிறிஸ்தவ மன்றம், 1993.

சரவணன், ப., (ப.ஆ.) **அருட்பா மருட்பாக் கண்டனத் திரட்டு**, நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், 2019.

சனாதனன், தா., அகிலன், பா., (தொ.ஆ.) **இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள், மூன்றாவது தொகுதி (2000-2005)**, கொழும்பு: சமூகப் பண்பாட்டு: உயர் கற்கைகளுக்கான நிறுவனம், 2005.

சனாதனன், தா., **நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920-1990)**, கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2018.

சிவசம்புப் புலவர்., **வல்வைச் சிவன்கோயில் சபிண்டி நாடக சங்காரம்**, யாழ்ப்பாணம்: அச்சுவேலி யந்திரசாலை, 1900.

சிவத்தம்பி, கா., **தமிழ்ப் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும் நவீனவாக்கமும்**, வல்வெட்டித்துறை: நடராஜ கோட்டம், 1989.

.................. *யாழ்ப்பாணம்: சமூகம் - பண்பாடு - கருத்துநிலை,* கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2000.

.................. *இலக்கியமும் கருத்துநிலையும்,* சென்னை: மக்கள் வெளியீடு, 2002.

சிவலிங்கராஜா, எஸ்., சரஸ்வதி சிவலிங்கராஜா., *பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி,* கொழும்பு சென்னை: குமரன் புத்தக இல்லம், 2008.

தியாங்கோ, கூகி வா., *அடையாள மீட்பு - காலனிய ஓர்மை அகற்றல்* (மொ.பெ: அ.மங்கை), புதுவை: வல்லினம், 2004.

நித்தியானந்தன், மு., *கூலித்தமிழ்,* சென்னை: க்ரியா, 2014.

நீலகண்டன், கா., சுதர்சன், செ., (ப.ஆ) *உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு - தேவபாகமும் மானுடபாகமும்,* உடுப்பிட்டி: புலவரில்லம், 2014.

பூலோகசிங்கம், பொ., *தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள்,* கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2002.

மயில்வாகனம், நா., *ஐரோப்பியர் பார்வையில் இலங்கை,* யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 1974.

மனோகரன், துரை., *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி,* யாழ்ப்பாணம் - கண்: கலைவாணி புத்தக நிலையம், 1997.

முத்துமோகன், ந., *தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்* சென்னை: நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், 2015.

மெம்மி, ஆல்பெர்., *காலனிய ஆண்டைகளும் காலனிய அடிமைகளும் - இருபுறம் அழிக்கும் உறவுகள்,* (மொ.பெ: நோயல் ஜோசப் இருதயராஜ்) புத்தாநத்தம்: அடையாளம், 2012.

வேலுப்பிள்ளை, க., *யாழ்ப்பாண வைபவ கௌமுதி,* வசாவிளான்: ஜயஸ்ரீ சாரதா பீடேந்திர சாலை, 1918.

வேலுப்பிள்ளை, சி,டி., *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்*, வட்டுக்கோட்டை: யாழ்ப்பாணக் கல்லூரி, 1984.

வையாபுரி, மு., (தொ.ஆ.) *காலனியகால மதப்பிரசாரத்தில் கிருத்துவர்கள் - இந்துக்கள்*, சென்னை: அலைகள் வெளியீட்டகம், 2011.

ஜயவர்த்தன, குமாரி., *அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை - இலங்கையில் காலனித்துவ முதலாளித்துவ வகுப்பின் தோற்றம்* (மொ.பெ: க.சண்முகலிங்கம்) கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம், 2015.

ஜெபநேசன், எஸ்., *இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் அமெரிக்கமிஷனும்*, கொழும்பு- சென்னை: குமரன் புத்தக ,ல்லம், 2007.

............... *தமிழின் நவீன மயமாக்கலும் அமெரிக்க மிஷனும்*, கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம், 2007.

.............. *இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன்*, கொழும்புசென்னை: குமரன் புத்தக இல்லம், 2009.

ஜெயசீல ஸ்டீபன், எஸ்., *தமிழ் இலக்கியப் பயணம் (1543-1887) – ஐரோப்பியர் மொழிபெயர்ப்புகளின் வழியே* (மொ.பெ: கி. இளங்கொவன்), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2021.

ஸெய்த், எட்வர்ட்., *அதிகாரத்திடம் உண்மையைப் பேசுதல்*, (மொ.பெ: ரவிக்குமார்), புதுச்சேரி: மணற்கேணி, 2010.

**பிரசுரங்கள்**

*சிறுபுத்தகத்தினால் வரும் பலன் - 1877., சைவர்ஆட்சேப சமாதானம் - 1878.,*

நற்கொடை - *சீதனத்தால் ஆகும் கொடுமைகள் - 1869.,*நற்சமயம் - 1842., விவாக

சம்பந்தம் - 1844., யாழ்ப்பாணம்: கிறிஸ்தவ மிஷன் பிறஸ். புதுச்சைவமும் சூத்திரப் பிரசங்கமும் - 1842., விக்கிரகாராதனையும் சுருப வணக்கமும் - 1906., யாழ்ப்பாணம்: கத்தோலிக்க மிஷன் பிறஸ்.

**பத்திரிகைகள்**

*இந்து சாதனம்., 12.03.1901., 12.08.1901., 15.08.1901., 09.04.1902., 11.03.1903., 23.12.1903., 23.10.1905., 25.08.1906., 12.05.1909., 21.07.1909., 06.04.1910., 11.05.1910., 02.12.1911. யாழ்ப்பாணம்.*

**மலர்கள்**

**தேவகீயம் - பண்டிதை தேவகியம்மா நீலகண்டன் நினைவு மலர்.,** *உடுப்பிட்டி: புலவரில்லம், 2004.*

**நாவலர் நூற்றாண்டு மலர்.,** *யாழ்ப்பாணம்: ஆறுமுகநாவலர் சபை, 1979.*

நாவலர் மாநாட்டு விழா மலர்., கொழும்பு: *ஆறுமுகநாவலர் சபை, 1969.*

பனுவல்., கொழும்பு: *சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான நிறுவனம், 2009.*

**மாற்றுவெளி - தமிழ் அச்சுப் பண்பாடுச் சிறப்பிதழ்.,** சென்னை: *மாற்று வெளியீடு, 2014.*

**அகராதிகள்**

விஞ்சிலோ., **தமிழ் - ஆங்கில அகராதி,** சென்னை: *ஏசியன் எடிடுகேஷனல் சேவிஸ், 1992.*

*சந்திரசேகர பண்டிதர்., மானிப்பாய் அகராதி, யாழ்ப்பாணம்: அமெரிக்க மிஷன் பிறஸ், 1842.*

Tamil Lexicon - Vol. 2., Vol. 3., Vol. 5., Madras: University of Madras, 1982.



## கலாநிதி செல்லத்துரை சுதர்சன்

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், தமது ஆரம்பக் கல்வியை வசாவிளான் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக்கலை பயின்று முதல் தர சித்தியில், தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். அப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்பெறும் உயர்திறன் மாணவருக்கான ஆறுமுகநாவலர் புலமைப் பரிசிலையும், கலைப்பீட உயர் சிறப்புத் தேர்ச்சிச் சான்றிதழையும் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தில் 'எதிர்ப் பிலக்கிய நோக்கில் ஈழத்துத் தமிழ்க் கவிதை' எனும் தலைப்பில் ஆராய்ந்து முதுதத்துவமாணிப் பட்டத்தினைப் பெற்றவர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 'பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்ப் புலமைமரபில் காலனிய எதிர்ப்பு' எனும் தலைப்பில் ஆராய்ச்சிசெய்து, ஆராய்ச்சிக்கான உயர்தரத் தேர்ச்சியுடன் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

சிவசம்புப் புலவர் மரபினரிடம் மரபு முறையிலும் பல்கலைக்கழகத்தில் நவீன முறையிலும் கற்ற இவர், இலங்கைத் தமிழ் ஆராய்ச்சிப் புலத்தில் நன்கறியப்பட்ட இளம் புலமையாளர். இலங்கையில் காலனியம் மற்றும் பின்காலனியம் இவரது விசேட ஆய்வுக் களங்களாக அமைகின்றன. கோட்பாட்டு ஆய்வாளராகவும் கவிஞராவும், விமர்சகராகவும் அறியப்படும் இவர், இலக்கியக்கோட்பாடு, இலக்கியத் திறனாய்வு, சமயப் பன்மைத்துவ இலக்கியம், அகராதித் தமிழ், இலக்கணம், மொழியியல், கோவில் இலக்கியம், நவீன தமிழ்க் கவிதை, இதழியல் ஆகியவற்றையும் தமது கவனத்தைக் கோரும் ஆய்வுப் பரப்புகளாகக் கொண்டுள்ளார்.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் விரிவாக்கித் திருத்திய அண்மைய பெரும் பதிப்பில், மொழியியல் அறிஞர் இ. அண்ணாமலையின் வழிகாட்டலில், இலங்கைத் தமிழ்ச் சொற்களுக்கான வளவாளராகப் பணியாற்றியதோடு, அவ் அகராதிக் குழுவிலும் அங்கம் வகித்தவர். காலத்தால் அழிந்த, கவிசிரேஷ்டர் சிவசம்புப் புலவரின் பிரபந்தங்களைத் தேடித் தொகுத்து, பெருந்திரட்டாகப் பதிப்பித்து, கூழங்கைத்தம்பிரானின் புலமைமரபின் கிளையாக, புலவர் மரபினை அடையாளங்காட்டி, புதிய வரலாற்று உரையாடலைத் தொடக்கியவர். ஈழத்தின் முதலாவது நவீன தமிழ் இலக்கிய இயக்கமாகிய மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கத்தின் 'மறுமலர்ச்சி' இதழ்களை, பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் மேற்பார்வையில் ஆய்வு செய்தும் பதிப்பித்தும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்து, ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றின் ஆரம்ப வரலாற்றுக்கு முழுமை வழங்கியவர். இருபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்குகிறார்.

தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைச் சமர்ப்பித்த இவர், தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகள் பலவற்றின் ஒருங்கிணைப்பாள ராகவும் ஆய்வுத் தொகுதிகள் பலவற்றின் பதிப்பாசிரியராகவும் விளங்கியவர். தமிழ் வளர்ச்சிக்குப் பணியாற்றும் பல்வேறு நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் இவர் படைப்புக்கள் மற்றும் ஆய்வுகளுக்காக விருதுகளையும் பரிசில்களையும் பெற்றுள்ளார்.

Guru Printers, Thirunelvely.